ஜநவிநோதிநி.

இல. 11, 12.] { நவம்பர்மீ டிசெம்பர்மீ } 1884. [புஸ்த. XV.

இந்துதேசத்தின்மேல் முதல்முதல் படையெடுத்த போர்வீரன்.

மாஸிடன்நகரத்து அரசனும் ஆசியாகண்டத்தை ஜயங்கொண்டவனுமாகிய மகா அலெக்சாந்தரைப்போல் அவ்வளவு அதிகமாய் உலகமெங்கும் பிரசித்தமான புகழ்பெற்று, அதை நெடுங்காலம் நிலைநிற்கச்செய்தவர் மற்றெவருமில்லை. அவன் கிரீஸ்தேசத்தில் பிறந்தவனும, அத்தேசம் மிக்க மேன்மைபெற்றிருந்த காலத்தில் இருந்தவனுமாகையால் அவனுடைய பெயர் ஒருபோதும் மறந்து போவதற்கிடமில்லை; ஐரோபபாவிலே பண்டிதனெனப பேர்பெற்ற எல்லோருககும் இநத மேன்மைபெற்ற மனிதனுடைய வரலாறு நன்றாய்த் தெரியும். ஆசியாவிலோ அவன் பிரசித்தி பின்னும் விசேஷமாய்ப் பரவியிருக்கின்றது. அவன் இன்னானென்பதும், இன்ன காலத்திலிருநதவனென்பதும், இன்னின்ன காரியங்கள் செய்தவனென்பதும எவாக்கும் சரியாய்த் தெரியாவாயினும், ஸிகந்தர் என்னும் பெயர் வெகுவாய் எல்லோருக்கும் தெரியும்; அவனே இந்த வெற்றிவீரனென நிதானிக்கிறார்கள். அவனுடைய வாழ்க்கை சொற்பகாலந்தான் ஆனாலும், அக்காலததில் அவன் தேசாந்தரங்களின்மேல் படையெடுத்துச செய்த காரியங்கள மிகவும் அதிசயமானவை. அத்தன்மையான அவனது சரித்ங்களைச் சரியாக விளக்கும்படிப புஸ்தகமொன்றும இவ்விநதுதேசததிய பாஷைகளில் கிடையாது. அதனால அவன் வரலாறுகளை ஒருவாறு இதனடியில் எழுதுவோம். அவன் மாஸிடன் நகரத்திலிருந்து ஐபிராத்து நதிக்கும், அங்கிருந்து பாஞ்சாலதேசத்திலுள்ள பியாஸ் (விபாஸா) நதிக்கும் வந்தவழி பூகோளபபடத்தைப பாாததால் செவ்வையாய்த் தெரியவரும்.

ஸிகந்தர்நாமா என்னும் புஸ்தகத்தைத் தாம் படித்திருப்பதால் அலெக்சாந்தருடைய சரித்திரபுஸ்தகம் வேறொன்றும் தமக்கு வேண்டுவதில்லை எனச் சிலர் சொல்வார்கள்; அது சரியன்று; ஏனெனில் அந்தப்புஸ்தகம மிகவும் பிசகானது. அந்தப்புத்தகம் எழுதியவாக்கே சங்கதிகளைச் சரியாய்த் தெரிநதுகொள்ள உபாயமில்லாதிருந்ததென்பதும், தேசசரித்திரம் பூகோளம் இவை அவர்க்குச் செவ்வையாய்த் தெரியாவென்பதும் தெளிவாய்த் தெரிநதவிஷயம. மேலும் அந்தப் புஸ்தகத்தைப் பார்ப்பவனும் அலெக்சாநதருடைய தேசம் இன்னதென்றும், அவன் செய்த காரியங்கள் இவையென்றும் தெரிந்துகொள்ள முடியாது. அந்தப புத்தகம்மாத்திரம்படித்த உபாத்தியாயனை ஒருமாணாக்கன் நீலநதி ஐபிராத்துநதிகளும், அலெக்சாந்தா அழித்த நகரங்களும், ஸ்தாபித்தபட்டணங்களும் எங்கேயிருக்கின்றனவென்று வினவினால், அதற்குத் தகுதியானவிடைகொடுக்க அவரால் ஆகாது. மேலும் அவன் யார், எக்காலத்திலிருந்தவன் என்று கேட்டாலும், அவன் இன்னாருடைய காலத்திலிருந்தவன், இன்ன மதஸ்தன் என்று சரியாய்ச் சொல்லமுடியாது; வெகுநாளைக்கு முன்னே எங்கேயோ மேற்கே ஒருதேசததிலிருந்த அரசன் என்று மாத்திரமே சொல்லுவார்.

அலெக்சாந்தர் பிறப்பதற்கு முன்னமே சரித்திரபுஸ்தகத்தின் காரியம் இத்தன்மையதெனக் கிரீஸ்தேசத்தார்க்கு நன்றாய்த்தெரியும். பிரசித்தமான சரித்திரங்களைச் செய்யுள்களிலேபோல் அலங்காரமான நடையிலன்றி, சரளமான பாஷைநடையில் உள்ளபடி எழுதுவது மிகவும் பிரயோஜனமானதென அத்தேசத்தவர் தெளிவாய்த் தெரிந்துகொண்டிருந்தனர். ஆகவே, அலெக்சாநதர்காலத்திலிருந்த அவனுடைய சிநேகிதர்கள் இரண்டுபேர் தாம் கண்ணாரக்கண்ட சரிதைகளை அப்படியே எழுதிவைத்தனர். அவ்விரண்டு புஸ்தகங்களும் காணாமற்போயினவாயினும், தெய்வாதீனமாய் அவற்றை இரண்டு கிரந்தகர்த்தாக்கள் படித்திருந்தனர். அவர்கள் எழுதிய புஸ்தகங்கள் இப்போது இருக்கின்றன. அவர்களில் ஒருவர் அலெக்சாந்தருடைய காலத்துக்கு 400 வருஷமும், மற்றொருவர் 460 வருஷமும் பிற்பட்டவர்கள்; ஆனாலும் அவர்கள் மாஸிடனுக்குச் சமீபத்திலிருந்தவர்கள். அத்தேசத்து ஜனங்கள் மிகச்சிறந்த விவேகசாலிகள்; அவ்விடத்திலேயும் பல பொய்சசெய்திகளும் கட்டுக்கதைகளும் பரவலாயினவெனத் தெரிந்து, அவை தம் செவியில் புகாதபடி கருத்தாய்க் காத்துக்கொண்டிருந்தனர்.

ஸிகந்தாநாமா எழுதியவரோ அலெக்சாந்தருக்கு 1,000 வருஷம் பிற்பட்டவர்; அவர் தேசமோ அலெக்சாந்தருடைய தேசத்துக்கு வெகுதூரம்; அத்தேசத்து ஜனங்களோ இன்னது பொய், இன்னது மெய்யெனத் தேர்ந்தெடுக்கத் திறமையற்றவர்களாகித் தாம் காதினால் கேட்பவையாவுமே உண்மையென நம்பியிருந்

தவர்கள். ஆதலின் அவர் எழுதியது அத்தனை சரியாயிருக்குமென்று நம்பக்கூடாது. அவர் வேண்டுமெனப் பொய்க்கதையெழுதக் கருதியவரன்று; கேட்போர் செவிக்கு இனிப்பாயிருக்கும்படி செய்யுள் எழுதப்புகுந்து தாம் காதினால் கேட்ட கதையை அப்படியே ஏட்டில் எழுதிவிட்டார். எது எப்படியாயினும், அலெக்சாந்தர் கிரீஸ்தேசத்தானாகையால் அவனைப்பற்றிய பிறதேசத்தார் எழுதிய சரித்திரத்தைவிட அத்தேசத்தார் எழுதியதை நம்புவதே உத்தமமானது. மேலும் இப்போது புதிதாய்க் கண்டறிந்த பூகோளவிஷயங்களோடு அலெக்சாந்தர் போயவந்ததாய் அவற்றிற் சொல்லிய விஷயங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, அத்தேசத்தவர் எழுதிய சரித்திரமே சரியானதெனத் தெளிவாகின்றது.

அலெக்சாந்தர் என்பவன் மாஸிடன்தேசத்து அரசனாகிய பிலிப்பு என்பவனுடைய குமாரன். மாஸிடன்தேசமாவது, இப்பொழுதுள்ள துருக்கி சுல்த்தானுடைய ராஜ்யத்தில் சேர்ந்திருக்கின்ற, அக்காலத்தில் கிரீஸ் அல்லது யவனதேசமென்று வழங்கிய, தேசத்தின் ஒருபாகம். அவன் கிறிஸ்துபிறக்க 354-ஷத்தில் பிறந்தவன். கிரீஸ்தேசம் ஐரோப்பாகண்டத்தின் கீழண்டைக்கோடி; ஒரு சிறிய கடற்கிளையினால் ஆசியாவினின்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது ஐரோப்பாவிலே பிரபலமாயிருக்கின்ற ஜாதியாரைப்பற்றி அக்காலத்தில் ஒன்றும் தெரியாது. அவர்களுடைய தேசமெல்லாம் மிருகத்தன்மையான முரட்டு ஜனங்கள் வாஸஞ்செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் யாரோ சிலர் தவிர மற்றவர்களெல்லாம் விக்கிரகபூஜைசெய்பவர்கள்தாம். பிலிப்பு தன் போறிவினாலும் பராக்கிரமத்தாலும் அத்தேசமுழுவதும் மிக்க செல்வாக்கு உடையவனாயிருந்தான். கிரீஸ்தேசத்தார் கூட்டம் பெருத்தவராயிராவிடினும், போறிவும் போராற்றலும் உடையவர்களாயிருந்தனர்.

அக்காலத்திலே ஆசியாகண்டத்தில் எவ்வளவுதூரம் தெரிந்திருந்ததோ அவ்வளவும், ஆப்பிரிக்காவிற்சேர்ந்த எகிப்துதேசமும் ஆகிய இவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து பாரசீகராஜ்யமென வழங்கிக்கொண்டிருந்தது. இந்த ராஜ்யம் ஸைரஸ் என்பவனால் ஸ்தாபிக்கப்பட்டு டரையஸ் ஹிஸ்தாஸ்பெஸ் என்பவனால் ஆளப்பட்டிருந்தது. இந்த ராஜ்யம் அந்தக்காலத்திலே நூற்றிருபது மாகாணங்கள் உள்ளதாகி இவ்விந்துதேசம்வரையில் பரவியிருந்தது. சிந்துநதிக்கரையிலிருக்கும் தேசங்கள்கூட அதில் சேர்ந்திருந்தன. சிந்துநதியிலிருந்து கடல்மார்க்கமாய்க் கப்பல்கள் எகிப்துதேசத்திலுள்ள சுவேஸ்நகரத் துறைக்குப் போக்குவரவாயிருந்தன.

அலெக்சாந்தருடைய காலத்திலே டாரா எனப் பிரசித்திபெற்ற டரையஸ் அந்த ராஜ்யத்துக்கு அரசனாயிருந்தான். ஆயின் அந்த

ராஜ்யம் செவ்வையாய்ப் பரிபாலிக்கப்படவில்லை; குடிகளைப்பற்
றிய கவலை சிறிதும் கிடையாது. ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் தம்
மனம்போனபடிக் குடிகளைக் கொள்ளையடித்துவந்தார்கள். ஜாதி
மதங்களைப்பற்றிய நிர்ப்பந்தம் மிகவும் அதிகம. அந்நிய மதஸ்தர்க
ளெல்லாரும் அவர்களுடைய துன்பம் பொறுக்கமாட்டாமல் தேசாந்
தரங்களுக்கு ஓடிப்போனார்கள். அப்படி மகம்மதியருடைய வருத்
தம்பொறாமல ஓடிவந்தவர்களுள் சிலர் இன்னும் பம்பாயில் இருக்
கின்றனர்.

அலெக்சாந்தருடைய காலத்துக்கு ஒரு நூற்றாண்டுமுன்னே பார
சீகதேசத்தரசர்கள் கிரீஸ்தேசத்து ஜனங்களோடு போர்செய்துகொ
ண்டிருந்தனர். பாரசீகர் இரண்டுதரம் கிரீஸைப் படையெடுத்
தனர். அவருடைய சேனை கிரீஸ்தேசத்தாருடைய சேனையைப்
பார்க்கிலும் மிகவும் அதிகமாயிருந்தாலும், தரைவழியாயும் தண்
ணீர்வழியாயும் முற்றிலும தோற்கடிக்கப்பட்டது. அதன்பிறகு
சிற்றாசியாவில அடிக்கடி சண்டை நேரிட்டுக்கொண்டிருந்தது. அக்
காலங்களில் பாரசீகதேசத்து அரசர்களாயினும் கவர்னர்களாயினும்
கிரீஸ்தேசத்து ஜனங்களைக் கூலிக்குப்பிடித்துப் போர்வீரர்களாய்ச்
சேர்த்துக்கொண்டு யுத்தஞ்செய்வது வழக்கமாயிருந்தது. அவ்வி
டத்தில் அரசாண்டுவந்த ஆர்ட்டஜர்ஸ் (Artaxerxes) என்பவன்
ஒருசமயத்தில் இவ்வாறே பதினாயிரம கிரீக்சேனையைச் சேர்த்துக்
கொண்டு, தன்மேல கலகஞ்செய்துகொண்டிருந்த தன் சகோதர
னாகிய ஸைரஸ் என்பவனோடு பெரும் போர்செய்து அவனைக் கொன்
றனன். இந்தச்சேனைகள் சண்டைக்குப் போகும்போதும், போய்த்
திரும்பிவரும்போதும எவரும் உட்புகுந்து செல்லக்கூடாமல் வழி
துறையில்லாத மலைக்காடுகளைப் பேதித்துக்கொண்டு போயின.
இவ்வாறான பல செய்கைகளால், பாரசீகதேசத்து அரசனுடைய
பலம மிகவும் அற்பமானதென்றும், நன்றாய்ப் போர்த்தொழில்
பழகிய சேனை சொற்பமிருந்தாலும் அப்படிப் பழகாத பலகோடி
ஜனங்களையும் வெல்லமாட்டுமென்றும், கிரீஸ்தேசத்தார் தெரிந்து
கொண்டனர்.

விஸ்தீரணத்தில் பெருத்ததும் பலத்தில் சிறுத்ததுமான பார
சீகராஜ்யமும், விஸ்தீரணத்தில சிறுத்ததும் பலத்தில் பெருத்தது
மான கிரீக்ராஜ்யமும் ஆகிய இரண்டு ராஜ்யம் அந்தக் காலத்திலிருந்
தனவென இதனால் தெளிவாகின்றதல்லவா? கிரீக்ராஜ்யம் பல
பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்றுக்கொன்று எப்போதும் கலகப்
பட்டுக்கொண்டேயிருந்தன. பிலிப்பு அரசன் அவற்றையெல்லாம்
ஒன்றாய்ச் சேர்த்துத் தன் ஆட்சிக்கு உள்ளாக்கினன். பிறகு ஆசி
யாவின்மேற் படையெடுப்பதற்கு வேண்டியமுயற்சி செய்துகொண்
டிருக்கும்போது ஒரு சதிகாரனால கொல்லப்பட்டான். அப்பொ

ழுது அவனுடைய மகனாகிய அலெக்சாந்தர் இருபதுவயது பிள்ளையாயிருந்தாலும், உடனே தன் தந்தை நினைத்தகாரியங்களை நிறைவேற்ற ஆரம்பித்தான். அலெக்சாந்தர் டைரயஸுக்குத் தமையனோ, அல்லது நெருங்கிய வேறு சம்பந்தமுள்ளவனோ எனத் தெரியாத சிலர் நினைத்திருக்கிறார்கள். பாரசீகர்களுக்கு அவனால் நேர்ந்த மானக்கேட்டை மறைக்கும்படி யாரோ கற்பித்த கட்டுக்கதையே அன்றி இது வேறொன்றுமல்ல; அலெக்சாந்தர் டைரயஸினுடைய மகளைக் கலியாணஞ்செய்துகொண்டு அவனுக்கு மருமகனாயினான். இதுவேயன்றி அவ்விருவர்க்கும் முற்பட்ட தேகசம்பந்தமொன்றும் கிடையாது. கிரீஸ்தேசத்தாருக்கும் பாரசீகர்களுக்கும் அதற்குமுன் கொள்வது கொடுப்பது ஒன்றும் ஒருபோதும் கிடையாது. அலெக்சாந்தர் சிறிதும் கலப்பில்லாத கிரீஸ்தேசத்தான். அவனைத் தேவகுமாரனென்றுகூடச் சிலர் சொல்லப்புகுந்தார்கள். அவன் இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவனாயிருப்பானாயின், பிரஜைகள் அதையும் நம்புவார்கள்; அவனைத் தெய்வமென்று சொன்னாலும் நம்புவார்கள். அப்படியன்றிச் சரித்திரவாலாறுகள் உண்மையாய் எழுதத்துவக்கியகாலத்தில் பிறந்தவனாகையால் அவன் இன்னானென்பது தெளிவாய்த் தெரிந்திருக்கிறது.

இந்த அலெக்சாந்தர் கிறிஸ்து பிறக்க 334-ல் பிறதேசங்களின் மேல் படையெடுத்துச்செல்ல ஆரம்பித்தான். 34,500 காலாள்களையும் 4,500 குதிரைவீரர்களையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுத் தன் மாஸிடோனியாதேசத்துக் கரையோரமாகவே சென்று, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள ஹெல்லெஸ்பாண்டு என்னும் குறுகலான ஜலசந்தியைப் படவுகளைக்கொண்டு தாண்டினான். தாண்டினவுடனே அத்தேசத்ததிகாரிகள் சிலர் இவனுடைய சேனையைப்போல மூன்று பங்கு அதிகமான சேனைகளோடு வந்து எதிர்க்க, அவர்களுடன் போர்தொடுத்து ஜயித்து அநேகரைக் கொன்று பலரைச் சிறையாய்ப்பிடித்தான். பின்பு அவனை எதிர்ப்பார் ஒருவருமில்லை. நிர்ப்பயமாய்ச் சிற்றாசியாவில் புகுந்து வழியிலுள்ள நகரங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் ஜயித்து, ஜயித்தவிடமெல்லாம் புதிய அதிகாரி ஒருவனை ஸ்தாபித்துக்கொண்டே சென்று சிற்றாசியாவின் தென்கிழக்கிலுள்ள ஸிரியாதேசத்துக் கோட்டைவாயிலென்று சொல்லப்பட்ட ஒரு மலைத்தொடரைக் கடந்து ஸிரியாதேசத்தில் புகுந்தான். இது இப்படியிருக்க டைரயஸ் 2 லக்ஷம் சேனையுடன் தன் ராஜதானியினின்றும் புறப்பட்டு ஐபிராத்துநதியைக் கடந்து ஸிரியாதேசத்துக்கு வர, அங்கோரிடத்தில் இரண்டு சேனையும் சந்தித்தன. உடனே போர் துவக்கமாயிற்று. டைரயஸின் சேனை அத்தனை அதிகமாயினும் அவன் முற்றும் தோற்கடிக்கப்பட்டுத் தன் பெண்சாதிபிள்ளைகளையும் பகையாளிகையில் ஒப்புவித்து ஓடிப்போனான். இந்தப் போரில் இறந்துபோன பாரசீகர்களுக்குக்

கணக்கில்லை. டைரயஸ் ஐபிராத்துநதிக்கு அப்புறம் ஓடிப்போய்த் தன் ராஜ்யத்தில் பாதி விட்டுவிடுவதாக ஒப்புக்கொண்டு, ஸமாதானமாய்ப்போம்படி சொல்லியனுப்பினான். அலெக்சாந்தர் அதற்குச் செவிகொடாமலே, வந்தால் முழுதும்வரட்டும், இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாமென்றிருந்தான்.

ஸிரியாதேசம் முழுமையும ஜயிக்கப்பட்டது; டமாஸ்கஸ் என்னும் பெரிய பட்டணமும் பிடித்துக்கொள்ளப்பட்டது. அவ்விடத்திலுள்ள பிரஸித்தமான மற்றப் பட்டணங்களையும் பிடித்துக்கொண்டு யூதாகளுடைய நகரமாகிய எருசலேம் பட்டணத்திற்குச் சென்றான். அவனைக் கண்டவுடனே அந்நகரத்தார் தாமே ஓடிவந்து அடிபணிந்து அவனுக்கு அடைக்கலமானாகள். ஏனெனில், வெகுநாளைக்கு முன்னமே இனி ஒருகாலத்தில் கிரீஸ்தேசத்தாசன் ஒருவன் வந்து பாரசிகராஜ்யம் அனைத்தையும் அழிக்கப்போகிறானென்றதாய் அவர்களுடைய ஸ்வாமி சொல்லியிருந்தாராம். அந்தப்படியே அவன் வந்துவிட்டானென்று அவர்கள் எதிர்கொண்டுபோய் அவனைப்பற்றித் தங்கள் புத்தகத்தில் எழுதியிருப்பதைக் காட்டினார்கள். அது கண்டு அவன், அந்தத் தெய்வத்தைக் கும்பிட்டு அங்கிருந்த பிரசித்தமான கோயிலையும் குடிகளையும் அழிக்காமல் அப்புறம் போய்விட்டான்,

பின்பு அவன் அங்கிருந்து தென்முகமாகத் திரும்பி எகிப்து தேசத்தைநோக்கிச் சென்றான். அத்தேசம் பல நூற்றாண்டுகளாய்ப் பாரசிகராஜ்யத்தில் ஒரு பகுதியாகவே யிருந்தது. அது நீலநதி பாய்ந்து வெகு செழிப்புற்ற தேசமாயினும், குடிகள் அத்தனை சிறந்தவர்களல்ல; மிகவும் அற்பமானவர்களாய்ப் பூனைமுதலிய அற்பஜந்துக்களைப் பூசிக்கும்படியான மூடபுத்தியுடையவர்களாயிருந்தனா. நாளைக்கும் அநேகர் அவ்வண்ணமே யிருக்கின்றனர். அத்தேசத்தை அலெக்சாந்தர் வெகு சுலபத்திலே ஜயங்கொண்டு அங்கே ஒரு வனாந்தரத்திலிருந்த பிரஹஸ்பதியின் ஆலயத்தைப் போய்த் தரிசித்து, மத்தியதரைக்கடலின் கரைக்குச் சமீபத்தில் நாளைக்கும் அலெக்சாந்திரியாவெனப் பேர்பெற்று வழங்குகின்ற ஒரு பெரிய பட்டணத்தையும கட்டுவித்தான்.

அதற்குப்பிறகு கீழ்நாடுகளையும் ஜயிக்கவேண்டுமெனக் கருதி அங்கிருந்து புறப்பட்டு ஐபிராத்து, திகிரிஸ் என்னும் நதிகளைக் கடந்து சென்றான். அலெக்சாந்தர் காலம்வரையில் மேலாசியாவின் அரசர்களெல்லாம் இவ்விரண்டு நதிகளுள் ஏதாவது ஒன்றின் கரையிலேதான் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருந்தனர். இந்தக் குணகோளார்த்தத்தில் தரைவழியாகவாயினும் கடல்வழியாகவாயினும் நடக்கும் எவ்வகை வியாபாரமும் அதன் மூலமாகவே செல்லவேண்டியதாயிருந்தது. அலெக்சாந்தர் அத்தேசத்தின்

வழியாகத் திகிரிஸ்நதியைக் கடந்து செல்லும்போது அதற்கு அருகாமையில டரையஸினுடைய சேனை மறுபடி எதிர்ப்பட, உடனே பெரும்போர் உண்டாயிற்று. அந்தப் போரில் நேரிட்ட கொலைகளுக்கு அளவில்லை; கடைசியில் அலெக்சாந்தா ஜயங்கொண்டான்; பாரசீகர்களுடைய சேனை முற்றும் நாசமாக்கப்பட்டது. அந்தச் சமயத்தில டரையஸ் பயந்து பகைவர்களுக்குப் புறங்காட்டியோட, அவன் கீழ்உததியோகஸ்தனே ஒருவன் அவனைக கொலைசெய்துவிட்டான். ஐபிராத்துநதிக்கரையில் பாரசீகாகளுடைய ராஜதானியாகிய பாபிலன்நகரமானது பின்பு ஒருவருத்தமுமின்றிப் பிடித்துக்கொள்ளபபட்டது. இவ்வாறாகக் கிரீக்தேசத்தார் கடைசியிலே பாரசீகதேசம் முழுமைக்கும் தாங்களே அதிகாரியானார்கள்.

மிகவும் பராக்கிரமசாலியாகிய அவ்விளஞ்சிங்கத்திற்கு . இவ்வளவுமாத்திரமே போதவில்லை. நினைத்தகாரியம் நினைததபடி கைகூடக் கைகூட, அதனிடத்திலுள்ள ஆசை மேன்மேலும் விருத்தியாவதேயனறித் தணிவதில்லை யல்லவா? பின்னும் கிழக்கே ஆபகனிஸ்தானம், இந்துதேசம்வரையில் சென்று ஜயம்பெற்றுவா வேண்டுமென்று அவன் அதற்கு வேண்டிய ஸன்னாகஞ்செய்தான். ஸன்னாகஞ்செய்துகொண்டு செல்லுகையில் வழியிலுள்ள சூசா, பெர்ஸிபொலிஸ் என்னும் இரண்டு பட்டணங்களைப பிடித்துககொண்டான். முதறபட்டணத்தில் மிகுநத செல்வம் அகப்பட்டது; மற்றொன்றைத் தீயிட்டுக்கொளுத்தி அங்கிருந்த அழகான அரண்மனைமுதலியவற்றை அழித்துவிட்டான். பிறகு அங்கிருந்து பாரசீகதேசத்தின் வழியாய்ச்சென்று மாாக்கத்திலுளள பல நகரங்களையும் பார்த்துக்கொண்டு பாக்திரியாதேசததின்மேலும், பக்காரா, சாமர்க்கநது ராஜ்யங்களின்மேலும் படையெடுத்து அஙகுள்ள ஜனங்களையெல்லாம் ஜயித்தான். மொகலாயவமிசததை ஸ்தாபித்து டில்லிமாநகரில் நெடுநாள் அரசுசெலுத்திய பேபர் சக்கரவர்த்தி பககாராதேசத்தினின்று வந்தவனேயாம். பலவாறு சொல்லியென்ன? அலெக்சாந்தர் எங்கெங்கே சென்றானோ, அங்கங்குள்ள ஜனங்களை ஜயித்துப் பிரதான நகரங்களைப பிடித்துக்கொண்டு, அவ்விடங்கள்தோறும் தன் பேர் விளங்கப் புதிய பட்டணங்களைக் கட்டுவித்துக்கொண்டே போயினான்.

பிற்பாடு அவன் கபிலதேசத்திற்புகுந்து அங்கிருந்து இந்தியாவின்மேல் படையெடுக்க முயன்றான். அக்காலததிற்கும் இக்காலத்திற்கும் இடங்களின் பெயா முதலிய வெகுவாய மாறுபட்டுப போயிருப்பதால் அவன் இததேசத்திற்கு வநத வழி இன்னதென்று சரியாயச் சொல்லக்கூடவில்லை; ஜலலபாத்து மூலமாய் மலைகளைக் கடந்துகொண்டு பெஷாவாவந்து சோந்ததாய்த் தோன்றுகிறது. அம்மலைவழியில் இப்பொழுது இருப்பதுபோலவே முரட்டுக காபில

ஜனங்கள் பலர் வாஸஞ்செய்துகொண்டிருந்தார்களாகையால், அவர்களை எதிர்த்து ஜயித்துக்கொண்டே அவன் அப்புறம் போகவேண்டியதாயிற்று. இத்தேசத்திற் புகுந்தவுடனே சிந்துநதிக்கு மேலுள்ள பிரசித்தமான பட்டணமொன்றைப் பிடித்துக்கொண்டு ஆட்டக் அல்லது ஆடங்கபுரியண்டை அந்த நதியைத்தாண்டி பஞ்சாப் அல்லது பாஞ்சாலதேசத்திலுள்ள ராவல்பிண்டி மாகாணத்தில் பிரவேசித்தான். இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்னே நமது தேசத்தில் நடந்த இந்தச் சரித்திரத்தைக் கேட்க இத்தேசத்தார்க்கு வெகுவினோதமாயிருக்குமன்றோ. ஸிந்துநதியைத் தாண்டிவரும்படி அவ்விடத்தரசனாகிய தாக்ஸிலிஸ் என்பவன் அலெக்சாந்தருடன் நேசஞ்செய்துகொண்டு வழிவிட்டானாயினும், அதற்கப்பாலுள்ள நாட்டரசனாகிய போரஸ் அல்லது புருஷோத்தமராஜன் ஜீலம்நதியைத் தாண்டிச் செல்ல அவனுக்கு வழிவிடக்கூடாதென்று அவனுடன் அமர்தொடுக்கச் சித்தமாயிருந்தான். (நமது தேசத்தார் முற்காலத்தில் ஜீலம்நதியை வித்ஸ்தை என வழங்கினார்கள்.)

அலெக்சாந்தர் அதற்குச் சிறிதும் அஞ்சவில்லை; புருஷோத்தமனுடைய சேனையைத் தோற்கடித்து அவனையே சிறையாய்ப் பிடித்தான். ஆயினும் பிடிபட்ட ராஜனைச் சந்தித்து மரியாதைசெய்து மறுபடி அவனை அத்தேசத்திலேயே ஸ்தாபித்து, கூஜராதேசத்தின் வழியாகவந்து .சீனுப் என்கிற சந்திரபாகாநதியைத் தாண்டி, அங்கிருந்து அப்பால்சென்று ரவியென வழங்குகிற ஐராவதிநதியையும் கடந்துவந்து, அங்கங்கே எதிர்த்த சிலரை ஜயித்துக்கொண்டு அமிர்தஸாசு நகரத்துவழியாக வந்தான். அவ்வளவு மாத்திரமேயல்ல; அதற்கு இப்பாலுள்ள வியாஸை, சதத்ருநதிகளையும் கடந்து, அங்குள்ள தேசங்களையெல்லாம் ஜயித்துக்கொண்டு யமுநாநதியைத்தாண்டிக் கங்கையையும் கடந்து, கப்பலேறி ஆபிரிக்காகண்டத்தைச் சுற்றிக்கொண்டு சுதேசம்போய்ச்சேரவேண்டுமெனக் கருதினான். அவ்வண்ணமே அவன் மத்தியதேசத்திற்கு வந்து அயோத்தியை, மதுரை, மகதம், ஹஸ்தினாபுரம்முதலிய அக்காலத்தில் பிரசித்தமான ராஜ்யங்களைப் பார்த்திருந்தால் வெகு அதிசயமாயிருக்கும். அவ்வெண்ணம்மாத்திரம் அவனுக்குக் கைகூடி வாராமற் போயிற்று. ஏனெனில்,

இன்னும் கிழக்கே போகவேண்டுமென்ற அவனது கருத்தைத் தெரிந்துகொண்டவுடனே அவன் சைனிகர்களெல்லாம் கலகம் செய்ய ஆரம்பித்தனர். அவ்வரசனிடத்தில் அவர்களுக்கு அன்பு அதிகமேயாயினும், நெடுந்தூரம் பிரயாணம்செய்து வந்ததனால் அலுப்படைந்து போனதுபற்றி அவனுடைய கருத்துக்கு இணங்கக்கூடவில்லை. அது தெரிந்து அவன் வேறுவிதியின்றி அவர்களிஷ்டப்படியே திரும்பிவிட்டான். திரும்புகாலில் முல்த்தான் என வழங்கும் மூலஸ்தானமுதலிய இரண்டோரிடங்களில் போர்செய்யும்போ

ழுது அலெக்சாந்தருக்கும் பிராணாபாயமான சில துன்பங்கள் நேரிட்டன. ஆயினும் அவன் எப்படியோ அவைகளுக்குத் தப்பித்துக்கொண்டு போயினான். போகும்போது தன் படையை மூன்று விதமாகப் பிரித்து மூன்றுவழியாகச் செல்லவிட்டுத் தான் அவற்றுள் ஒன்றுடனே சென்றான். அப்படிச் செல்லுகையிலே வழியில சோறு தண்ணீர் கிடைக்காமையாலும் வழி நடக்கும் வருத்தத்தாலும் அநேகம்படைகள் மாண்டுபோயின. போனதுபோக மிருந்த சேனை கடைசியாக ஐபிராத்துநதியண்டை ஒன்றாய்வந்து கூடியது.

அவ்வளவோடு அந்த மகாயுத்தம் அடங்கிற்று. இவ்வாறு அலெக்சாந்தர் வெற்றிபெறும்படி தன் ராஜதானியை விட்டுப் புறப்பட்டு மறுபடி பாபிலன்நகரம் வந்துசேருமளவும் அவன் சென்ற தூரத்தை அளவிட்டுப்பார்த்து 19,000 மைலுக்கு அதிகம் இருக்கின்றதெனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு நெடிதாகப் படையெடுத்தவர் எக்காலும் எவருமில்லை. இப்படையெழுச்சி மிகவும் ஆச்சரியமானது. தற்காலம் இந்துதேசத்தை ஆளும் அங்கிலேயர்கள் இங்கிலாந்திலிருந்து இத்தேசத்திற்கு வந்து மறுபடி இங்கிருந்து திரும்பிப்போவதும், சீனாமுதலிய மற்றத் தேசங்களுக்குச் செல்வதும், இதைவிட எத்தனையோ பங்கு பெரிதான யாத்திரையேயாயினும் இதன்வழி வேறு, அதன்வழி வேறு.

இவ்வாறு சுதேசம்போய்ச் சேர்ந்தும் அலெக்சாந்தர் அவ்வளவோடு அடங்கியிருக்கவில்லை. இப்பூமண்டலத்திலுள்ள தேசங்களுள் சிறந்ததேசமான இந்தியாவை ஜயிப்பதற்கு வேண்டிய உபாயங்கள் செய்ய ஆரம்பித்தான்; பூமண்டலத்தில் பல விடங்களிலும் புதிய பட்டணங்களைக் கட்டத் துவக்கினான்; கப்பல்கள் சமைக்க ஆரம்பித்தான். அவன் செய்த முயற்சிகளுள் பல மிகச் சிறந்தவைகளும், ஒரு பெரிய சக்கரவர்த்திக்கு ஏற்றவைகளுமாகவேயிருந்தன. அப்பொழுது அவனுக்கு வயது முப்பத்தொன்றேயாயினும், அவன் எங்கும் எதிரியெவனும் இல்லாதவனாயினான். அவனது பராக்கிரமத்தினாலும், வெற்றிகளாலும் உலகத்தார் அனைவரும் பிரமித்துநின்றார்கள். அவனுடைய உபாயங்களெல்லாம் கைகூடி வருபவைபோலவே யிருந்தன. ஆயினும், ஐயோ! அவற்றுள் ஒன்றும் நடந்தேறவில்லை. அவ்வளவு போர்களுக்கும் பெரும் துன்பங்களுக்கும் தப்பின அவ்வீரன் கடைசியில் சுரங்கண்டு பாபிலன் நகரத்திலிறந்துபோக, அவனுடன் அவன் கருத்திற்கொண்ட சூழ்ச்சிகள் அனைத்தும் அழிந்துபோயின. அதன்பிறகு மகம்மதியர் ஜயங்கொள்ளுமளவும் பதினைந்து நூற்றாண்டு இந்துதேசத்திற்கும் இதன் மேற்கிலுள்ள மற்றத் தேசங்களுக்கும் சம்பந்தமில்லாமலே யிருந்தது.

அலெக்சாந்தர் இறந்த இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் அவனது பிள்ளை பெண்சாதி முதலிய குடும்பத்தார் அனைவரும்

கொல்லப்பட்டனர். அவன்கீழிருந்த அதிகாரிகள் தந்தம் கைக் கெட்டியவரையில் அவன் ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அவனது பேரும் பிரசித்தியுமொழிய மற்றவையெல்லாம் போய் விட்டன. பிற்காலத்தில் உடனே அவனுக்குச் சரியானவன் ஒருவ னும் உண்டாகவில்லையாதலால், அவன் பேர் பின்னும அதிகமாகப் பிரகாசித்தது. எருசலேம் நகரத்தில் யூதர்களுடைய வேதபுத்தகத திலே அலெக்சாந்தர் படையெடுத்துப பாரசிகராஜ்யத்தை ஜயிப் பான் என்று எழுதியிருந்ததென்று சொன்னோமே. அதன்மேல் சில பக்கங்களுககு அப்பால், சிலகாலத்திற்குப் பிறகு அவன் ராஜ்யம் இப்படி சின்னபின்னமாய்ப போய்விடுமென்பதும் எழுதி யிருந்ததாம்.

அலெக்சாந்தர் ஒரு மகாராஜாவும், பல பெருங்குணங்கள் அமைந்த போர்வீரனுமாயிருந்தானுயினும், பல பொல்லாத குணங் களும் அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. ஒரு காரணமுமின்றிக் கேவலம் சுயநன்மைக்காகவே அவன் அநேகம் மன்னுயிர்களை வதைத்தான்; பல பட்டணங்களைப் பாழாக்கினுன்.

அலெக்சாந்தர் அரசாண்டதேசங்கள் யாவை என்பீர்களோ? அவன் பிதிரார்ச்சிதமான மாவிடன்ராஜ்யமும், அவன் ஜயிதத நாடுகளென மேலே நாம் சொன்ன தேசமனைத்தும் அவனுட்சிக் குள் இருந்தன. ஆயினும் அவையாவற்றையும் அவன தான் நேரா கவே ஆண்டுவரவில்லை; முற்றும் தன் வசமான சிலவற்றில் தனக் குப் பிரதிநிதிகளை ஏற்படுததி அத்தேசத்து வருமானங்களைக் கொண்டு சேனைகளைக் காப்பாற்றுவது முதலிய காரியங்களை நடத்தி வந்தான். மற்றத்தேசங்களில் அவ்வவ்விடத்து அரசனையே நிலைக் கச்செய்து கப்பம் வாங்கிவந்தான். அவன் எவ்வளவு சுறுக்காய்த் தலையெடுத்துப் படையெடுதது அரசாளத்தொடங்கினுனே, அவ் வளவு சுறுக்கில் அவனுட்சி அழிந்துபோயினமையால் அவன் ராஜ்யத்துக் குடிததொகை இவ்வளவென்றும், வருமானம் இவ்வ ளவென்றும் எவ்வகையினும் கண்டறியக்கூடவில்லை; ஆயினும் அது ரோமராஜ்யத்தைவிட மிகவும் சிறியது என்பதற்குச் சநதேகமில்லை. இக்காலத்திலும் ராஜ்யவிஸ்தீரணம், செல்வம், குடித்தொகை எல் லாவற்றிலும் அங்கிலேயராஜ்யம் அதை மிகவும் அதிசயித்திருக் கின்றது.

மேலே சொல்லிய விஷயங்கள்யாவும் மனிதர்களுக்குச் சாத்திய மானவைகளும், நடந்திருக்கக்கூடியவைகளுமே ஆகையால் இதில் பொய்யான செய்தி ஒன்றுமில்லை. அலெக்சாந்தர் இவ்வுலகத்தைத் தாண்டிச்சென்று அங்கிருந்து பிராணுதாரமான அமுதம் கொண்டு வந்தானெனவும், அரேபியாவில் அவன் அடியெடுத்துவைக்காத வனுயிருக்க, அத்தேசத்திற்சென்று மக்காமுதலிய விடங்களைப்

பார்த்தானெனவும் இவை முதலாக சிகந்தர்நாமாவில் சொல்லியிருப்பவை சிறிதும் ஆதாரமற்றவையாயிருக்கின்றன. அடி நுனியில்லாத இவ்வுலகத்திற்கு எங்கே முடிவோ, அதற்கப்பால் என்ன இருக்கிறதோ, அவ்விடத்திற்கு இவன் எவ்வாறு சென்றானோ யாமறியோம். ஆதலின் அப்படிப்பட்டவை விநோதமான கட்டுக்கதையென்றே சொல்லவேண்டும்.

அதிகாரம் செலுத்துவதும் அடங்கி நடப்பதும்.

(தேனீக்களுக்குள் நடந்த ஒரு சம்பாஷணை.)

ஒரு ஊருக்கு அருகிலுள்ள காட்டிலே தேனீக்கள் கூடுகட்டிக்கொண்டு வெகுகாலமாய்த் தமது இயற்கைமுறை தவறாமல் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தன. அப்படியிருக்க, வெகு அழகாக வெயில்காயும் வஸந்தகாலத்தில் ஒருநாள் காலையில் அங்கிருந்த ஊழியஞ்செய்யும் சிறிய தேனீயொன்று தன் கூட்டைவிட்டுப் புறப்பட்டுப் பூக்களினின்றும் தேன் தேடிக்கொண்டு வரும்படி வெளியே போயிற்று. அன்று காலை அதிக வெப்பமுமின்றி அதிக குளிர்ச்சியுமின்றிச் சுகமாயிருக்கவே, அந்தத் தேனீ மிகவும் களித்து நெடுந்தூரம் சென்று அங்கிருந்த ஒரு தோட்டத்தில் புகுந்தது. அத்தோட்டத்திலே பலவிதமான பூக்கள் அழகாய்ப் பூத்துப் பரிமளம் வீசிக்கொண்டிருந்தன. அங்குள்ள மலர்களைக் கண்டவுடனே அந்த ஈயானது மிக்க மகிழ்ச்சிகொண்டு தனக்குத் திருப்தியானவரையில் அவற்றில் வீழ்ந்துபுரண்டு தேனைக் குடித்து, தான் சுமக்கத்தக்கவளவு தேன் சேகரித்துக்கொண்டு கூட்டுக்குத் திரும்பியது.

திரும்பிப்போகும்போது மார்க்கத்திலே திறந்திருந்த ஒரு வீட்டுச் சாளரத்தின் வழியே தெரியாமல் அவ்வீட்டிற்குள் அது புகுந்தது. அப்போது அவ்வீட்டில் அனைவரும் போஜனஞ்செய்துகொண்டிருக்கிற சமயம். புசிப்பவர்களெல்லாரும் என்னவோ கோலாகலமாய் பேசிக்கொண்டிருந்தனர். அந்தப் பேச்சின் ஆரவத்தைக் கேட்டுத் தேனீ நடுக்கமுற்றதானாலும், அங்கே வைத்திருக்கும் இனியபண்டங்களைச் சிறிது தின்னவேண்டுமென விருப்பங்கொண்டது. அத்தருணத்தில் திடீரென்று அங்கிருந்த ஒரு சிறுபிள்ளை, ஓகோ, இதோ தேனீ! இதோ தேனீ! நான் இதைப் பிடிக்கிறேன் என்று கூச்சலிட்டது. அக்கூச்சலைக் கேட்டுப் பயந்து தேனீ அவ்விடம்விட்டு வெளியேபோம்படி வேகமாய்ப் பறந்து

அங்கிருந்த பளபளப்பான ஒரு கண்ணாடிக்கதவில் முட்டிக் கொண்டது. ஏனெனில் அப்பிள்ளையின் கூச்சலில் மதிமயங்கி, இது வெளியென்றும், இது கண்ணாடிஒளியென்றும் பகுத்தறியக் கூடாமல் அது பிரமித்துபபோயிற்று. அதனால் உடம்பில இளைப் பும் கோபமும் அதிகமாகவே, சற்று ஆயாஸந்தெளிந்து அமைதி உண்டாகுமபடி அங்கிருந்த கதவுசசட்டத்தில சிறிதுநேரம் அது ஊர்ந்துகொண்டிருந்தது.

அபபொழுது அங்கிருந்த அக்காளும் தம்பியுமான இரண்டு பிள்ளைகள் இந்தச் சிறிய தேனீயைப்பறறி ஏதோ பேசத்தொடங்க, தேனீயும் அபபேச்சைக் கவனமாய்க் கேட்கலாயிற்று.

தம்பி: அக்காள், இது ஒரு ஊழியஞ்செய்யும் தேனீ, இதன் காலின்கீழ்த தேன்பைகள் தொங்குகின்றன பார்; இது எவ்வளவு சுறுசுறுப்பாய் உழைத்துப பாடுபட்டதோ!

அக்காள்: தேனும் மகரந்தமும் இது தானே தேடிக்கொள்ளு கிறதா என்ன தமபி?

தம். ஆம், பூக்களினின்றும் இது அவற்றைச் சேகரித்துக்கொ ள்கின்றது. இதுமாததிரமேயன்றி இந்தப் பூச்சி மெழுக்கு செய்து கூடுகட்டுவது முதலிய பல வேலைகள் இயற்றுகின்றது. ஐயோ பாவம, பேதைபபிராணி! ஊழியஞ்செய்யும் ஈ ஆகும்படி இதன் தலையில் ஆண்டவன் எழுதினனே.

அக். ஊழியஞசெய்யும் ஈ என்றாயே, அதென்ன தம்பி? பேதைப் பிராணியென்றாயே, அதேன்?

தம். இது உனக்குத் தெரியாதா? தங்களுக்காகவன்றி ஊரா ருககு உழைதது உடம்பு வருந்துகினற எல்லாருமபேதைப் பிரா ணிகளேயென்று நமது சிற்றபபன் சொல்லியது உனக்கு நினை வில்லையா? இந்த ஈயும் அப்படிப்பட்டதுதான். தேன்கூட்டில் ராணியொன்று உண்டு; அது ஒரு வேலையும் செய்வதில்லை; வீட டிலேயே உட்கார்ந்து அதிகாரம்பண்ணிக்கொண்டு குஞ்சு குழந்தை களைக் குலாவிககொண்டிருககினறது. மற்ற ஈக்களெல்லாம் அது எந்த வேளையில் எனன வேலையிடுமோவென்று அதன்கீழ்க் கை கட்டிக் காததுக்கொண்டிருககின்றன. இதோ நிற்கின்றதே, இமமாதிரியான ஈக்கள் பல இருக்கின்றன; அவை மற்ற ஈக்களு க்கு வேண்டிய எல்லா வேலைகளையும் தாமே செய்கின்றன. நமது சிற்றப்பனுக்கு இது தெரிந்தால் அவர் கைகொட்டிக் குலுங்க நகைப்பார்.

அக். ஆயின் தேனீக்களைபபற்றிச் சிற்றப்பனுருக்கு ஒன்றும் தெரியாதோ?

தம். தெரியாதென்றே தோன்றுகிறது; இச்செய்தி எனக்குத தோட்டக்காரன் சொன்னது. மேலும் ராணியொன்று இல்லாமல் ஒருமித்து வாழத் தேனீக்களாலாகாதென்ற செய்தி நமது சிற்றப்பனாருக்குத தெரிந்திருந்தால், அவர் அவைகளைப்பற்றி அவ்வளவு இகழ்ச்சியாய்ப பேசியிருக்கமாட்டார என்று நினைக்கிறேன். நேற்றைத்தினம் அவர் ஒன்று பேசிக்கொண்டிருந்தார; அதாவது: ராஜாக்களும் ராணிகளும் பிரகிருதிககு விரோதமானவர்கள. ஏனெனில், பிரகிருதியானது ஒருவனை அரசனாகவும, ஒருவனை அடிமையாகவும் ஒருபோதும் ஏற்படுத்தவில்லை; யாவரையும் சமமாகவே சிருஷ்டித்திருக்கின்றது; அதனால் அரசர்களும் அரசிகளும் மிகவும அநீதிக்காரர்கள என்று சொல்லுகிறார்.

அக். ஆயின், இந்தச் சங்கதியொன்றையும் அறிந்துகொள்ளத் தேனீக்களுக்குத் திறமைகிடையாதோ?

தம். கிடையாதென்பதற்குச் சந்தேகமென்ன? கிடைக்கவே கிடையாது. தோட்டக்காரன் எனக்குச சொன்ன சங்கதிமாத்திரம இவற்றிற்குத் தெரிந்தால் இந்த ஊழியம் செய்யும் ஈக்கள் எவ்வளவு மனவருத்தமுள்ளவைகளாகும்; அதை யோசித்துப்பார்.

அக். தோட்டக்காரன் சொன்னதென்ன தம்பி?

தம். தோட்டக்காரன் சொன்னதா? சொல்லுகிறேன் கேள்: முதலில் பிறக்கும்போது ராணியான ஈக்களுக்கும் ஊழியஞ்செய்யும் ஈக்களுக்கும் ஒரு வேற்றுமையும் கிடையாது; எல்லாம் ஒரு தன்மையானவைதாம். பிறந்தபின்பு அவைகளுக்குக் கொடுக்கப்படுகிற உணவு, அவை வளர்க்கப்படுகிற வீடு இவற்றின் வித்தியாஸத்தாலேயே அரசி அடிமை என்னும் வேற்றுமை உண்டாகின்றது. தேனீக்களை ஊட்டிவளர்க்கின்ற ஈக்கள் இந்தக் காரியம் செய்கின்றன; அவை சிலவற்றிற்கு ஒருவகையான உணவும், சிலவற்றிற்கு வேறுவகையான உணவும ஊட்டுகின்றன; அவைகளையும் வெவ்வேறுவிதமாகச் செய்கின்றன. இப்படி வளர்க்கப்படுவதனாலேதான் சில ஈக்கள் ராணிகளாகின்றன; சில அடிமைகளாகின்றன என்று சொன்னான். உலகத்தில் அரசன் அடிமையென்ற வேற்றுமையும் இவ்வண்ணமேதான் உண்டாகின்றது; இயற்கையில் யாவரும் ஒரு தன்மையானவர்தாம் என்று நமது சிற்றப்பனார் சொல்லுகிறார். எந்நேரம் பேசுகிறது, எல்லாரும புசித்து எழுந்துவிட்டார்களே, நாமும் போவோம்.

அக். சற்றுநில், ஐயோ பாவம், இந்தப் பூச்சியை வெளியே ஓட்டிவிட்டுப் போவோம் என்று சொல்லி அதைத் துணியினால் மெல்லப் பிடித்துக்கொண்டு, பேதைப்பிராணியே, உனக்கு நல்ல உணவு ஊட்டித் தக்கபடி வளர்த்திருந்தால் இப்போது நீ அரசியா

யிருக்கலாமே; உன் துரதிர்ஷ்டம் இப்படியாயிற்று; உன் தலைவிதிக்கு யாரென்னசெய்யலாம. தேனும் மெழுக்கும் செய்துகொண்டு உன் பொறியைத் துலை; ஐயோ பாவம், உன் வருத்தம் வீண் போகாதிருக்கக்கடவது என்றுசொல்லிச் சாளரத்தின் கதவைத திறந்து அதை வெளியே விட்டுவிட்டாள்; அந்த ஈயும் பறந்து போய்விட்டது.

அன்று மாலைப்பொழுது மந்தமாருதம் வீச, மஞ்சள் வெயில் காய்ந்துகொண்டு வெகுவிநோதமாயிருந்தது. ஆயினும் இந்தச சிறிய தேனீக்கு அம்மாலைப்பொழுது மப்புமூடிய மழைநாள்போலிருந்ததேயன்றிச் சிறிதும் மகிழ்ச்சிதரவில்லை. ஏனெனில், ஒருவகை மயக்கமானது அதன் மனதை மூடிக்கொண்டது. ஒன்று செங்கோல் செலுத்துவதென்ன, நாம் அதன்கீழ்க் கைகட்டிச சேவகம் செய்வதென்னவென்ற கெட்ட எண்ணம் அதன் மனதில் உண்டாகியது.

இவ்வாறு மனங்கலங்கினபடியே அந்த ஈ தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்து, என்னைப்போல அதிர்ஷ்டஹீனப்பிராணி உலகில் வேறொன்றுமில்லையென்று சொல்லிக்கொண்டே தான் சேகரித்துக்கொண்டுபோன தேனை அங்கே இறக்கிற்று.

அப்பொழுது அந்தக் கூட்டிலே அதற்கு அருகாமையில் என்னவோ வேலைசெய்துகொண்டிருந்த, அனுபவத்திலும் வயதிலும் முதிர்ந்ததான, மற்றொரு ஈ இந்த ஈ சொல்லியதைக்கேட்டு, என்ன விசேஷம், இப்படி நீ வெறுத்துக்கொள்வதற்குக் காரணமென்ன? பிசகான காரியமேதாவது செய்துவிட்டாயா? விஷமுள்ள பூக்களின் மகரந்தத்தை மோந்தாயா? அல்லது நமக்கு விரோதியான பூச்சி ஏதாவது ஒன்று நமது கூட்டில் முட்டையிட்டதா என்று கேட்க, அதன்மேல் அவ்விரண்டுக்கும் உண்டான ஸம்பாஷணை யாவது:—

சிறிய ஈ: அப்படியொன்றுமில்லை; அப்படியொன்றுமில்லை; இன்று நான் நெடுந்தூரம் யாத்திரை போய்வந்தேன்; வரும்போது இதுவரையில் நமக்குத் தெரியாத பெருத்த விஷயமொன்றைத் தெரிந்துகொண்டேன். நாம் எல்லாம் மிகவும் துரதிர்ஷ்டப்பிராணியென்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது.

பெரிய ஈ: எந்த விவேகியப்பா இதுவரையில் நீ உன் அனுபவத்தில் கண்டதற்கு விரோதமான இச்செய்தியை உனக்குச் சொன்னது?

சிறிய. உனக்கு யார்சொன்னால் என்ன, நான் தெரிந்துகொண்டது உண்மையான விஷயமா அல்லவா, யோசித்துப்பார்; குழந்தை சொன்னாலும் கிளி சொன்னாலும் நியாயமான பேச்சானால் கேட்கவேண்டுவதுதானே.

பெரிய. கேட்கவேண்டுவது மெய்தான்; அது நியாயமான பேச்சோ அல்லவோ, அதுமாத்திரமே யோசிக்கவேண்டும். இதுவரையில் துரதிர்ஷ்டப்பிராணியாகாதிருந்த நீ இன்று ஏதோ ஒன்றினுடைய பேச்சைக் கேட்டமாத்திரத்தில் எப்படி துரதிஷ்டப்பிராணியாகிவிடுவாய்? எதையும் செவ்வையாய் ஆலோசித்துப் பின்பு தீர்மானிக்கவேண்டும்; ஆலோசியாமல் தீர்மானிப்பது மூடத்தனம்; இதைவிட நான் வேறென்ன சொல்லப்போகிறேனென்று சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு தன் கைக்காரியத்தை விடாமல் செய்தவண்ணமே சொல்லிற்று.

என்ன சொல்லியும் அந்தச் சிறிய தேனீ தன் மனவிசாரம் நீங்காததாகித் தன் கூட்டாளிகளுள் சிலவற்றைக் கூட்டமாய்ச் சேர்த்துக்கொண்டு, தான் வழியிலே போஜனசாலையில் கேட்ட செய்தியைச் சொல்லிற்று. அதைக் கேட்க அவைகட்கெல்லாம் ஆச்சரியமுண்டாயிற்று; பலவற்றுக்கு வெறுப்பும் உண்டாகியது. தான் சொன்ன பேச்சினால் அவைகளுக்கும் மனமுறிந்துபோகவே இது மிகக மகிழ்ச்சிகொண்டு, பிரகிருதியானது யாவரையும் ஒரு தன்மையராய்ப படைத்திருக்க, அதில் அரசனென்று ஒருவன் அதிகாரம் செய்வதும், மற்றவர் அவன்கீழ்க் கைகட்டிக் காத்திருப்பதுமாகிய அநியாயச் செய்கைகளைப்பற்றிய பெரிய உபந்நியாஸம் ஒன்று செய்தது.

அது உபந்நியாஸஞ்செய்து முடித்தபின் சற்றுநேரம் நிச்சப்தமாயிருந்தது. இரண்டொரு நிமிஷத்துக்கெல்லாம் அவை ஒன்றுக்கொன்று தங்கள் இருப்பைப்பற்றிக் கோபமாய்ப் பேசிக்கொள்வதும், தாங்கள் பிற்பாடு நடக்கவேண்டிய வழிகளைப்பற்றி ஆலோசிப்பதுமாய்க் கொசகொசப் பேச்சுகள் பல உண்டாயின. ஆயினும் அந்த அநியாயத்தைத் தீர்த்துக்கொள்ளும்படியான உபாயம் இப்படியென்றுமாத்திரம் ஒன்றுக்கும் விளங்கவில்லை. போஜனசாலையில் பேசிக்கொண்டிருந்த பிள்ளைகளின் சிற்றப்பனார் வந்து தங்களையெல்லாம் ராணியாக்கி, எல்லாத் தேன்கூண்டுகளையும் அவரே பரிபாலித்துக்கொள்வாரென நினைத்துச சில சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தனபோலும். இப்பேச்சுகளைக்கேட்டுக் கூட்டுக்குள் அறை கட்டிக்கொண்டிருந்த பெரிய தேனீ சற்றே தலையைத் தூக்கி, நீங்கள் பேசுவது வெகு விநோதமாயிருக்கிறது; தனக்கு வேண்டிய வேலைகளைச்செய்ய வேலைக்காரனில்லாமல் யாவரும் எப்படி ராணியாய்விடுகிறது என்று கேட்டது. அருகாமையிலிருந்த இரண்டொன்று அதற்கு ‘கோ’ என்று இரைந்து, இந்த மடையனுக்கு இதைப்பற்றி யென்னவிசாரம்? அந்தக் காரியத்தைச் சிற்றப்பனார் வந்து பார்த்துக்கொள்ளுகிறார்; இப்போது ராணியாயிருக்கிற கொடிய பூச்சிகளும், இனி ராணியாவதற்கு வளர்கின்றவைகளும் வேலைசெய்யட்டுமே என்றன.

அதைக்கேட்டுப் பெரிய தேனீ நகைத்துக்கொண்டே, அவை வேலைசெய்து வயதுதளாந்துபோனால் அபபுறம் என்னசெய்கிறது என்று கேட்டது. அதற்கு மற்றொன்றும் பதிலில்லை; போ, போ, வாயை மூடிக்கொண்டு விழுந்துகிட; யார் உன்னை இநத தாராக்ஷ பங்களெலலாம் செய்யச்சொன்னது என்று கூச்சலிட்டன. அதன் மேல் அந்தப பெரிய தேனீ இவை எககேடாயினும கெட்டு மென்று தன் காரியத்தில் கண்ணாயிருந்தது.

பின்பு மற்றொரு தேனீ சிறிது ஆலோசித்து, எல்லாரும் ராணி யாகிவிடுவது மிகவும் பேதமைத்தனமே; தேன் மெழுகு முத லியவை சேகரித்துக்கொண்டுவருவது யார்? தேன்கூடுகள் கட்டுவது யார்? குஞ்சுகளை ஊட்டிவளர்த்துப் பாதுகாப்பது யார்? ஆகலால் ராணியே இல்லாமல் எல்லோரும் வேலைசெய்கிறவர்களாகிவிடு வது உசிதமாய்த் தோன்றவில்லையா என்று எடுத்து உரைத்தது.

அந்தப் பேச்சைக்கேட்டு உள்ளே வேலைசெய்துகொண்டிருந்த பெரிய ஈ சும்மா இருக்கமாட்டாமல் மறுபடி தலையைத் தூககி, இப்படி மாறுவதனாலேதான் என்ன நன்மை விளையுமோ அதுவும் எனக்குத் தெரியவில்லை; முதலில் எல்லாம் ஊழியஞ்செய்யும் ஈக்களாயிருந்தவைதாமே என்று சொல்ல, உன் ஆலோசனையை யார்கேட்டது? நீ வாயை மூடிக்கொள்வாயா, மாட்டாயா என்று சில பூச்சிகள் அகங்காரமாய்ப் பேச, அது மறுபடி வாயை மூடிக் கொண்டது.

இப்படி இவை பேசிக்கொண்டிருக்கையிலேயே இராபபொழு தாகிவிட்டது. மறுநாள பொழுதுவிடிந்தவுடனே அவை முன் னிருந்த மனவிசாரத்தோடே எழுநதன. எழுந்து அவை திரும்ப வும கூட்டங்கூடித் தமக்கு நேர்ந்திருக்கும் துன்பததைப்பற்றியும, அதை விலக்கவேண்டிய வழிகளைப்பறறியும் ஆலோசிக்கலாயின. அப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் மிகவும் சிறியவைகளான தேனீக்கள் சில மிகக்கோபத்துடன் எழுந்து மற்றவைகள் சொல் வது சரிப்படாமல் இரைந்து கூசசலிடத் தலைப்பட்டன. போஜ னசாலையில பிள்ளைகள்பேச்சைக் கேட்டுவந்த தேனீ அத்தருணத் தில் அவற்றினிடம் சென்று ஸமாதானம் சொல்லாதிருந்தால், அவைகளுக்குக் கை கலந்து மிருக்கும். அநதத்தேனீ வந்து மத்தி யஸ்தஞ்சொல்லி, இப்பொழுது நாம் எல்லாரும் பெரியவர்களாகி விட்டதனால் ஒருவரும் ராணியாயிருக்க ஒலாது; ஆகையால் ராணியே யில்லாமல் குடியரசுமாதிரி எல்லோரும் கூட்டமாய்க் கூடித் தொழில்செய்து ஜீவிப்போம் என்று சொல்லிற்று. அந்த உபாயத்தைக் கேட்டுச் சரிதானென்று சந்தோஷமாய் அங்கிகரி தது எல்லாம் அந்தக் கூட்டைவிட்டுப் புறப்பட்டு, வெகு அழகாக வெளியே சென்று ஒரு தோட்டத்திற்குள் புகுந்தன. ஆயினும்

அந்தக் கூட்டம சேனாபதியில்லாத சேனைபோல் மிகவும் அல்லாடும்படியாயிற்று. மறுபடி அவை ஒன்றுகூடி ஆலோசிக்கும்போது, எவ்விடத்தில் கூடுகட்டுவது என்ற விஷயம் முக்கியமாய்த் தீர்மானிக்கவேண்டியதாயிற்று.

அவ்விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் கேட்கும்போது, ஒன்று அதற்குஇந்த தோட்டமே தகுந்தவிடமென்று சொல்லிற்று; ஒன்று வயலே வஸதியானவிடமென்றது; ஒன்று மரப்பொந்தைப்போலப் பத்திரமானவிடம் பிறிதிலலையெனறது; ஒன்று கட்டடங்களின் கூரைதான் குளிருக்கு அடைப்பான விடமென்றது; ஒன்று உயர்ந்த மரத்தின் உச்சிக்கிளைதான் உபத்திரவமற்ற விடமெனபது என் அபிப்பிராயமென்றது; எவர் சொல்வதும் எங்கள் புத்திக்குப் பிடிககவில்லையென மற்றவையெல்லாம் ஒன்றாய்க் கூச்சலிட்டன.

அது கேட்டு முன்சொன்ன சிறியதேனீ அவற்றினிடம் போய், உங்களைப்பார்க்க எனக்கு மிகக் கோபமுண்டாகிறது; காலைப்பொழுதெல்லாம் கழிநதுபோயிற்று; இன்னவிடததில் கூடுகட்டுகிறதென்பதைக்கூட இன்னும் தீர்மானிககாமல் வீணாய் விவாதப்பட்டுக்கொண்டிருககிறீரகளே; இதென்ன மூடத்தனம் என்றது.

அதைக் கேட்டுச் சில தேனீக்கள், என்ன சொல்லுகிறாய்! வாயைமூடு; இப்படி அதிகாரம்பண்ணினால் உன்னை ராணியென எல்லோரும் நினைப்பார்களென்று எண்ணுகிறாயோ? நாங்கள் சண்டை போட்டே பொழுதுபோக்கவேண்டுமென்று நினைத்தால் நீ யார் அதைக் கேட்பதற்கு? உன்னிஷ்டத்தை நீ செய்துகொள், போ என்றன.

அவைசொன்ன பேச்சைக்கேட்டு அந்தத் தேனீ மிகவும் வெட்கமடைந்து தலைகுனிந்துகொண்டு, ஒன்றும் தோன்றாமல் அத்தோட்டத்தின் ஒரு மூலைக்கு ஓடிப்போயிற்று. சிறிதுநேரம் அங்குள்ள மலர்களில் விநோதமாய்த் திரிந்து தன் மனக்கவலையை மாற்றிக்கொண்டு அப்புறம் அங்கிருக்கப பிடிக்காமல் அது மறுபடி முன் தான் வசித்த தேன்கூட்டிலேபோய்த் தனியாய் ஒரு அறையில் உட்கார்ந்திருந்தது. அத்தருணத்தில் அவ்விடம்வந்த பொறுமையுள்ள பெரியதேனீ அதைப்பார்த்து, ஆ! இதென்ன ஆச்சரியம்! நீ திரும்பிவந்து இங்கே தனித்து உட்கார்ந்திருப்பதற்கு என்ன காரணம்? உன் தோழர்கள் எங்கே? என்று கேட்க, அதன்மேல் அவ்விரண்டுக்கும் அடியில வருமாறு சம்பாஷணையுண்டாயிற்று.

சிறிய ஈ: நான் வரும்போது அவை தோட்டத்துக்கு வெளியே திரிந்துகொண்டிருநதன.

பெரிய ஈ: அவை அங்கே என்ன செய்கின்றன?

சிறி. கலகப்பட்டுக் காலம் கழித்துக்கொண்டிருக்கின்றன.

பெரி. எதற்காக?

சிறி. இப்பொழுது தாங்கள் என்னசெய்கிறதென்பதற்காகவே.

பெரி. இந்த வஸந்தகாலத்துக் காலைவேளையில் தேனீக்களுக்கு வேலைக்கு என்ன குறைவு என்று நகைத்துக்கொண்டே சொல்லிற்று.

சிறி. என்னைப் பார்த்து நீ ஏளனஞ்செய்யாதே; நாங்கள் செய்யவேண்டியது இன்னதெனத் தெரிவிக்கவேண்டும். முன் அந்தச் சிற்றபபனுர் பிரகிருதியைபபற்றியும், நாமெல்லாம் பேதமின்றிச சமமானவர்களென்பதைப்பற்றியும் சொல்லியது சரியாகவே தோன்றியது. ஆயினும் அவா சொல்லியபடி யாவரும் சமமாயிருக்க முயன்றுபாாக்கையில் சச்சரவுதவிர மற்றொன்றும் ஏற்படவில்லையே, இதென்ன புதுமை?

பெரி. இபபொழுது உனக்கென்ன வயது?

சிறி. நான் பிறந்து ஏழுநாளாகிறது.

பெரி. எனக்கென்ன வயது தெரியுமா?

சிறி. நீ பிறந்து பல மாதங்கள் ஆயிருக்குமென்று நினைக்கிறேன்; அது சரியோ, பிசகோ?

பெரி. சரிதான்; உனக்கு நான் மூத்தவனல்லவா? நண்பனே, நாமிருவரும் இப்பொழுது சண்டைபோடலாம வருகிருயா?

சிறி. அதெப்படிக் கூடும்; நான் மிக்க வலிவுள்ளவன்; உன்னை அடித்துத் தள்ளிவிடுவேனே.

பெரி. அவ்வளவு பலவீனனுன என்னிடம் நீ ஆலோசனை கேட்பதற்கு வந்த காரணமென்ன?

சிறி. அதென்ன அப்படிச் சொல்லுகிருய்? தேகபலத்திற்கும் அறிவுக்கும் சம்பந்தமென்ன? நீ பல சங்கதிகள் தெரிந்தவனென்பதும், நான் ஒன்றும் அறியாதவனென்பதும் இப்போது எனக்குத் தெரியவந்தது.

பெரி. இவ்வாறு பெரியோர், சிறியோர்—வலிவுள்ளவர், வலிவில்லாதவா—அறிவுள்ளவர், அறிவில்லாதவர்—இவர்கள் எப்படி சமானமாவார்கள்? அது கிடக்கட்டும், அதை எப்படியாவது சரிப்படுத்திக்கொள்வோம. எல்லாரும் ஒருதன்மையாக வாழ முயன்று பார்ப்போமா?

சிறி. அவசியம் அப்படியே செய்யவேண்டும்; அப்படியாயின், நாம் எங்கே வாஸஞ்செய்கிறது?

பெரி. நான் அதைப் பிறகு சொல்கிறேன்; நமக்குள் அபிப்பிராயம் பேதமாலுல் அப்போது யார் தீர்மானிக்கிறது?

சிறி. நீயே தீர்மானிக்கலாம்; நீ நன்றாய்ப் பழகின புத்திசாலியல்லவா?

பெரி. அப்படியே ஆகட்டும்; உணவுக்கு யார் தேன் தேடிக் கொண்டு வருகின்றது?

சிறி. நான் கொண்டுவருகிறேன், நான் வலிவுள்ளவனல்லவா?

பெரி. இப்பொழுது என்ன ஏற்பட்டது; நீயே என்னை ராணியாகவும், உன்னை ஊழியக்காரனாகவும் செய்துகொண்டாயல்லவா? மூடா, இதற்குப பழையவீடும், பழையராணியுமே போதாவோ? இரண்டுபேர் ஒன்றுகூடி வாழ்ந்தாலும் அவர்களைத் தக்கவழியில் நடத்தத் தலைவனாய் ஒருவனும், அவன் சொற்கேட்டு அதன்படி நடந்து வேண்டிய வேலைசெய்யத் தொழிலாளிகளும் இருக்கவேண்டுவது அவசியமென, இதனால் தெரியவருகின்றதல்லவா? ஒரு கூட்டத்தார்விஷயத்தில் கேட்கவேண்டுவதென்ன என்று சொல்லிற்று.

அது கேட்டுச் சிறியதேனீ சரிதானென்று அதை அங்கீகரித்துச் சந்தோஷமாய் பாடிக்கொண்டு, அதனோடுகூடவே புறப்பட்டுத் தன் தோழர்களிருக்குமிடத்திற்குப் போயிற்று. அந்த ஈக்கள் அப்பொழுதும் அவ்வண்ணமேதான் ஒன்றும் முடிவு செய்துகொள்ளாமல் தோட்டத்துக்கு வெளியே கலகப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றுள் பல பசி அதிகமாகி மனக்கலக்கமுற்றுத் தமது பழையவீட்டுக்கே போய் முன்போலவே வேலை செய்து ஜீவிக்கும்படி ஓடிப்போயின.

பின்பு இவ்விரண்டு ஈக்கள்போய்ச் சேர்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் பல ஈக்கள் கூட்டமாய்கூடிக் களித்துக் கூவிக்கொண்டு அவ்விரண்டினுடைய சொற்படிகேட்டு வேண்டிய மெழுகும் தேனும் சேகரித்துக்கொண்டு திரும்பித் தம்முடைய பழையவீட்டிற்கு வந்தன.

அவை அந்தக் கூட்டினுள் வழக்கப்படி நுழையவரும்போது அங்குநின்ற காவலாளிகளுள் ஒன்று அவற்றைப் போகவொட்டாமல் நிறுத்தி, சற்றே பொறுத்திருங்கள், ராணியின் பிரேதமொன்று வருகிறது; அது வெளியே போனபிறகு உட்செல்லலாமென்று சொல்லிற்று.

அந்தக் காவலாளி சொன்னது உண்மையே. இறந்துபோன ஒரு ராணியை இரண்டொரு நிமிஷத்தில் சிலதேனீக்கள் இழுத்துக்கொண்டு வந்து வெளியே தள்ளின. அதைப்பார்த்து அங்கிருந்த முன்சொன்ன சிறியதேனீ மிகக் கவலைகொண்டு, இப்பொழுது நடந்த செய்தியென்ன? இறந்துபோனதெது? நமது ராணி இறந்து போகவில்லையே என்று அங்கிருந்த காவலாளியைக் கேட்க, அது,

இல்லையில்லை, நம்ம ராணி இறந்துபோகவில்லை; இன்றுகாலையில் திடீரென்று இந்தக் கூட்டில என்னவோ ஒரு குழப்பமுண்டா யிற்று; அந்தச சமயத்தில அறைகளைக் காக்கின்ற ஈக்கள் சில கூட்டைவிட்டு வெளியே போயிருந்தன; அப்பொழுது கிரமப் படி இன்னும் சில நாள் அறைக்குள்ளேயே அடைபட்டிருக்கவே ண்டிய சிறு ராணியொன்று அறையைப் பிளந்துகொண்டு வெளிப் பட்டது. அவ்விரண்டு ராணிகளுக்கும பெருஞ்சண்டையுண்டாக, கடைசியில் அவற்றுள் ஒன்று இறந்துபோயிற்று. இறந்துபோனது எது வென்பீரோ? பலக்குறைநததுதான் இறநதுபோயிற்று. ஏற்ற சமயம வருவதற்குமுன் அந்த ஈ வெளிப்பட்டதனால் இப்படி நேரிட்டது; போனதைப்பற்றி இனி யோசிப்பதில பயனில்லை என்றது. இத்தனை கலகததிற்கும் நாமே மூலமல்லவாவென்று அந்தத் தேனீ சிந்தைகலங்கி நின்றது.

அப்பொழுது அதைப்பார்த்து அதனுடன் தோழமைகொண்ட பெரியதேனீ, இதோ இராணிகள்கூட ஒன்றுக்கொன்று சமமாயிருக் கவில்லை பார்த்தாயா? மற்றவர்களுக்குக் கேட்பானேன்? எவ்வி டத்திலேயும் ஒரு அரசன் உடனே ஏற்படவேண்டும; இல்லா விடின் கலகமே மேலிடும என்று சொல்ல, அது கேட்டு நீ உரைப் பது உண்மைதானென மற்றது ஒப்புககொண்டது.

பிரகிருதியிலுள்ள இவ்வியற்கையறிவின் செயலானது செயற் கையறிவுள்ள மனிதர் ஒன்றுகூடி இவ்வுலகில் வாழவேண்டிய விதம் இவ்வாறென்னும நீதிமுறையை உறுதிப்படுத்துகின்றது பாருங்கள்.

தொட்டாற்சுருங்கி.

தொட்டாற்சுருங்கி என்பது மூலவர்க்கத்துள் சேர்ந்த ஒரு விசித்திர மான செடி. அதைக் கையினால் தொடுவதினாலேமாத்திரமல்ல; வேறு வகையாலும் அது சுருங்குவதுண்டு. இருந்தாற்போலிருந்து உண்டாகிற அதிக உஷ்ணம், அதிக சீதளம் முதலியவற்றாலும் அது சுருங்கும்; ஜந்துக்களுடைய நரம்புகளைத் தாக்குகின்ற நீராவி, கந்தகப்புகை முதலிய வற்றின் பரிசத்தாலும் அது சுருங்கும். அச்செடி உஷ்ணமண்டலங்க ளெங்கும் உண்டென்றாலும், தென்னமெரிக்காவில் மிகுதி. அதை எவ்வளவு மிருதுவாகத் தொட்டாலும் அது சுருங்காதிராது. அதை நன்றாய்த் தொட்டுவிட்டால் அது அடியோடு ஒன்றாய் சுருங்கிக்கொள்ளும். அந்திப் பொழுதானதும் அதன் இலை கீழ்நோக்கிக் குவியும்; பின்பு அருணோதய காலத்தில் அவ்வாறு குவிந்த இலை மீண்டும் விரியும். அதன் இலை வாடிப்

பழுத்துப்போயிருக்கையிலும் அதற்குள்ள சுருங்குங்குணமட்டுங் கெடாது. மழை மிதமாய்ப் பெய்வதினால் அதற்குச் சிறிதும் குற்றமில்லை. ஆனால், அதிக மழைபெய்தாலும், அல்லது மழையோடு காற்றுங் கலந்தடித்தாலும், அது சிறிதும் பொறாமல் சுருங்கும். அது சுருங்குவதற்கும் விரிவதற்குமான காலவளவு ஒரு வேளையிலிருந்ததுபோலிராது; காலத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி பத்து நிமிஷமுதல் இருபது நிமிஷமளவுமாகும். மழைக்காலத்தைவிடக் கோடைக்காலத்திலேதான் விரைவில் சுருங்கும். அதின் கிளையிலொன்றை அதினின்றும் வேறாகத் தறிப்பினும் அதின் இயற்கையாகிய சுருங்குங்குணமட்டும் நீங்காது. அதன் கிளையை வெட்டி, அவ்வாறு வெட்டின பாகத்தைத் தண்ணீரில் முழுகும்படி வைத்திருந்தால் சிறிதுநேரமளவும் அப்படியே வாடாதிருக்கும் தண்ணீருக்குள் அந்தச் செடியை அழுத்திவைத்திருந்தால் அதன் இலை குவிந்து மீண்டும் விரியும். தண்ணீருக்குள் இருக்கையில் அதைத் தொட்டால் அது பூமியின்மீதிருப்பது போலவே சுருங்கும். ஆனால் சிறிது தாமதப்படும். இப்படிச் செய்வதினால் செடிக்கு யாதும் ஊறுபாடுண்டாகாது. அது யாதுகாரணத்தால் இவ்வாறு சுருங்குகின்றதென்பதை சாஸ்திரிகள் என்னபிரயத்தனஞ்செய்து பார்த்தும் அவர்கட்கு ஒன்றும் புலப்படவில்லை. அது மூலவர்க்கம், பிராணிவர்க்கம், இவ்விரண்டிற்கும் இடையாகிய ஓர் அற்புதமான சிருஷ்டியாயிருக்கவேண்டும்; அதனாலேதான் அது இவ்வாறு சுருங்குகின்றதெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

செய்ந்நன்றியறியாமை

(தொடர்ச்சி.).

கவுதமனென்பவன் தன்னை உயிர்த்தோழனென்று நம்பித் தன்னிடத்தில் மிகுந்த நம்பிக்கைவைத்துத் தனக்குப் பல நன்மைகள் செய்த ராஜதருமன் என்னும் பறவையைக் கொன்று எடுத்துக்கொண்டு ஓட, மித்திரத்துரோகியான அவனை விரூபாக்ஷன் பிடித்துவரச்சொல்லி, அந்தப் பக்ஷிராஜன் இறந்துபோனதுகண்டு தன் பட்டணத்தோடுகூடப் புலம்பத்தொடங்கினானென முன்சஞ்சிகையில் சொன்னோமே.

சிறிதுநேரம் கழித்து அவ்வரசன் மனந்தேறித் தன் மகனைப் பார்த்து, குழந்தாய், இப்பாதகனுக்குச் செய்யவேண்டிய தண்டனை வேறொன்றும் என் புத்திக்குப் புலப்படவில்லை; உயிர்க்குயிர் வாங்கி விடுவதே உத்தமமென்று நினைக்கிறேன். இவனை ராக்ஷதர்கள் தங்கள் இஷ்டப்படிப் பிடுங்கித்தின்னட்டும்; பாபமே வடிவமா

கக்கொண்ட இவனைச் சித்திரவதைசெய்தாலும் என் மனத்துயரம் தீராது; இராக்கதர்கள் தங்கள் கருத்தின்படி இவனை அடித்துக் கொல்லட்டும் என்று சொன்னான். அங்கிருந்த நிசாசரர்களெல்லாம் அந்தப் பாபியின் மாமிசத்தைப் புசிக்க விரும்பாமல் அரசன் பாதத்தில் வீழ்ந்து, மகாப்பிரபுவே, தாங்கள் இப்படிக் கட்டளையிடக் கூடாது; என்னதான் அரக்கராய்ப் பிறந்தாலும் இந்த மாபாவியின் மாமிசத்தையும் புசிக்கவேண்டுமா? இவன் இறைச்சியை எங்களுக்குக் கொடுக்கவேண்டாம்; காட்டிலே வழிபறித்துத் திரிகிற கள்ளர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று வணங்கி வேண்டிக் கொண்டனர். அது கேட்டு விரூபாக்ஷன், அப்படி உங்களுக்கு வேண்டாதபக்ஷத்தில் உங்கள் கருத்தின்படியே இவன் மாமிசத்தை வேடர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்ல, அவர்கள் உடனே அவனைப்பிடித்துத் துண்டுதுண்டாக வெட்டி வேடர்கள் கையில் கொடுக்கப்பார்த்தார்கள். அந்தக் கொடியவனது மாமிசத்தை அவர்களும் புசிக்கப் பிரியப்படவில்லை. பார்த்தீர்களா, செய்ந்நன்றி கொன்றவனது பாதகத்தை! மனிதர்களின் இறைச்சியையே உணவாக உடைய அரக்கர்கூட அவனைத் தின்ன விரும்பவில்லை.

> "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றபடி எப்பாதகஞ் செய்தார்க்கும் அப்பாதகத்தினின்றும் நீங்க யாதாயினும் ஒரு வழியுண்டு; செய்ந்நன்றியை மறத்தலாகிய பெரும்பாதகம் செய்தவர்க்கு ஒருகதியுமில்லை, அதோகதி தான். மித்திரத்துரோகியான மாபாவியின் மாமிசத்தை நாய் நரி பூச்சி புழுக்கள்கூடப் புசிப்பதில்லையென்றால், அப்பாதகத்தின் கொடுமையை யாம் என்னென்று சொல்லலாம்!

அதன்பின்பு விரூபாக்ஷன் ராஜதருமனது உடலை வெகு சிறப்பாய் அலங்கரித்து எடுத்துக்கொண்டுபோய், சந்தனக்கட்டைமுதலிய வாஸனைப்பொருள்களாலும், நவமணிகளாலும் மேன்மையாய்ச் சிதையடுக்கி சாஸ்திரவிதிப்படி தகனஞ்செய்தான். அந்தத் தீ மூண்டு ராஜதருமனுடல் எரிந்துகொண்டிருக்கையிலே காமதேனுவானது அந்தச் சிதைக்கு நேரமேலாக வானத்தில் வந்து நின்று தனது அமுதமான பாலை அதில் பெருக்கியது. அந்தப் பால அதன் வாய்நுரையுடன்கூடி ராஜதருமன் எரிகின்ற சிதையில் வந்துவிழ, அந்த அமிர்தம் மேலே பட்டவுடனே ராஜதருமன் அதினின்றும் திவ்வியமான சரீரத்துடன் பிழைத்து எழுந்து விரூபாக்ஷனிடம் வந்துசேர்ந்தான். அது கண்டு அனைவரும் ஆநந்தக்கண்ணீர் பெருக்கினார்கள்.

இப்படி இவர்கள் ஸந்தோஷமடைந்திருக்கிற சமயத்திலே தேவேந்திரன் விரூபாக்ஷனுடைய சபைக்குவந்து, தெய்வாதீனம்,

அவற்றை நாம் அத்தேசத்தாரைவிட அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியதாயிற்று. இப்பொழுதோ நாம் அதேமாதிரி உடைக ளையே வெகு ஸரஸமானவிலைக்கு வாங்கித் தரித்துக்கொள்ளக் கூடிய வர்களாயிருக்கிறோம். ஆயினும் பருத்தியை எத்தனை விதங்களாக உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடுமோ அவ்வளவும் செய்ய இவ் விடத்தில் இன்னும் வழி யேற்படவில்லை; ஏனெனில், ஏதோ ஒருவித மான துணிதவிர மற்றவகைகளொன்றையும் செய்ய இத்தேசத்தார் இதுவரையில் ஒருவரும் முயலவில்லை. அதனால் நாம இன்னும் இங்கி லாந்தினுடைய தயவையே எதிர்பார்க்கவேண்டியதாயிருக்கின்றது. இத்தேசத்தில் கடுக்காய் முதலிய சாக்குகள் மிகுதியாய் உற்பத்தியா கின்றன; அவை இங்கிலாந்துக்குப் போய்ப் பலவகை வர்ணமுள்ள மைகளாக மாறித் திரும்பி இத்தேசத்திற்கு வருகின்றன. இந்தி யாவில் விளைகிற உபயோகமான பொருள்கள் பலவற்றை இம்மா திரியே வெளித்தேசத்துத் தொழிலாளிகள் காரியங்களுக்கு உத வியாகும்படி செய்து மிகுந்த லாபமடைகிறார்கள். இவ்வித மாகவே இத்தேசத்தில் விளைகிறபொருள அனைத்தையும நாம் முதலில் அவர்களுக்குச் சுலபமான விலைக்குக் கொடுத்துப் பின்பு அவற்றையே வேறுவடிவமாக மிகவும் உயர்ந்த விலைக்குக கொள் ளுகின்றோம். இத்தேசத்தவர்கள்மாத்திரம் இங்கே விளையும் பொரு ளகளைச சரியாக உபயோகித்துக்கொள்ளவேண்டிய வழிகளைத் தாமே தெரிந்துகொள்வார்களாயின், சீக்கிரமே மற்றத் தேசத் தார் பார்த்துப பொறாமைப்படும்படியான நிலைமைக்கு வந்து விடுவாரகள் என்பதற்குச் சந்தேகமில்லை. காரியங்களை எளிதில் முடித்துக்கொள்ளும்படியான சாமக்கிரிகள் இப்படிச் சுலபமாய் அமைந்திருக்க, இத்தேசத்தார் மற்றத் தேசத்தவர்களுக்கு எதிர்க் கெதிராகுமபடி முயலாதிருப்பது பெருங்குறைவாயிருக்கின்றது.

மிகவும் செழித்த பூமியாகிய பாஞ்சாலதேசத்தைப் போய்ப் பார்த்தவர்கள் அங்குள்ள ஆடுகளைக் கண்டு ஆச்சரியப்படாமல் இரார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் எவ்வளவு அற்பமான பிராணி யாயினும் அதற்கும் வேண்டிய சவுக்கியங்களில் ஒன்றுமொன்று குறையாமல் கடவுள் எல்லாவற்றையும் அமைத்திருக்கிறார். பாஞ் சால தேசத்தில் குளிர்காலத்திலே குளிரும், கோடைக்காலத்திலே வெப்பமும் மிகவும் அதிகமெனப் பிரசித்தம். அத்தன்மையான தேசத்தில ஆடுகள் இத்தென்னாட்டிலுள்ள ஆடுகளைப்போலவே யிருந்தால் அவை அவ்விடத்தில் பிழைத்திருக்கவேமாட்டா. அதனால் வெப்பம் குளிர்ச்சிகளால் அவ்வாடுகளுக்கு எவ்விதமான துன்பமும் நேராமல் காக்கும்படி மெல்லிய மயிர்களாகிய சிறந்த போர்வையை அவற்றிற்கு ஈசன் அளித்திருக்கிறார். அத்தேசத்திலே மலைப்பிராந்தங்களிலுள்ள ஆடுகளின் மயிர் மிகவும் மெதுவும, மழ மழப்புமானது. அவ்வளவு உயர்ந்த பொருள் ஐரோப்பாவிலும்

அகப்படாது, ஆஸ்திரேலியாவிலும் அகப்படாது. அப்படிப்பட்ட அருமையான பொருள் இத்தேசத்தில் அற்பமான குப்பைகூளங்கள்போல வீணுக்கப்படுகின்றது. காச்மீரத்துச் சால்வை மிகவும் உத்தமமான பொருளென்று உலகமெங்கும் பிரசித்தமானது. அது குளிர்காலத்தில் குளிருக்கு அடக்கமாய்ப் போர்த்துக்கொள்ள யாவாக்கும் அவசியமான போர்வையாயிருப்பதுமாத்திரமேயன்றி, எக்காலத்திலும் அனைவர்க்கும் தம்மை அலங்கரித்துக்கொண்டு சபை முதலிய விடங்களுக்குப் போகவும் ஏற்ற உடுப்பாயிருக்கின்றது. இத்தேசத்தார் இதை நெடுங்காலமாக உபயோகப்படுத்திவந்தார்கள் என்பது மாத்திரமேயல்ல; ஐரோப்பியர் முதலியோரும் வெகு சிறப்பாய்க் கொண்டாடித் தரித்துவருகிறார்கள். நாகரீகம் பெற்றவர்களுக்கு இவ்வுத்தமமான பொருளினால் உண்டாகும் சவுக்கியமும், அழகும், பெருமையும் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல ஒருபோதும் முடியாது. கறுப்பு, வெளுப்பு, சிவப்பு, பச்சை என்ற எல்லா வருணத்திலும் இந்தச் சால்வைகளுண்டு. இவ்விதமான சால்வைகள் நெடுங்காலமாய்க் கையினாலேயே நெய்யப்பட்டுவருகின்றன. யோசித்துப்பார்க்கையில் காச்மீரம், அமிர்தஸா அல்லது அமிர்தஸாசு, இந்தத்தேசத்து ஜனங்களுக்குச் சால்வை நெய்வதுதவிர வேறுவேலை யில்லையெனத் தோன்றுகிறது. அப்படியின்றி யந்திரங்களின் மூலமாய்ச் சால்வை நெய்யப்புகுந்தால் வெகு சுலபமாக நெய்துகொள்ளலாமே; இந்த யோசனை இதுவரையில் ஒருவர் புத்தியிலும் உதிக்கவில்லைபோலும். யந்திரங்களின்மூலமாய் நெய்யும் சால்வை இப்பொழுது கையினால் நெய்யப்படுவதுபோல, அத்தனை உறுதியாயும் இழையொத்தும் இருக்கமாட்டாது என்னலாம்; ஆனாலும் அதனால் அத்தனை கெடுதியில்லை. மேலும் சால்வைநெய்கிற சரக்குகளைக்கொண்டு வேறு பலவிதமான உடைகளும் நெய்துகொள்ளலாம் அல்லவா?

ஆகையால் இத்தேசத்திலே சால்வைகளும் பலவகைக் கம்பளங்களும் நெய்வதற்கு ஏற்ற யந்திரங்கள் பாஞ்சாலம் பம்பாய்முதலிய இடங்களில் ஏற்படுத்தினால் எவ்வளவு நன்மையாய் இராது! சால்வை, கம்பளம்முதலியவை கையினால் நெய்வதற்கு வெகுகாலம் செல்வதால், அதுகாரணமாகச் சரக்குகளின் விலையும் அதிகமாகின்றது.

அப்படியன்றி அவை யந்திரங்களின் மூலமாய் நெய்யப்படுமாயின், அந்தச் சரக்கு இதினும் உயர்ந்ததாயிராவிடினும், ஏறக்குறைய இதற்குச் சமமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை; விலையோ மிகவும் ஸாலமாயிருக்கும். உயர்ந்தவகையான சரிகைச் சால்வைகள் நெய்ய நெடுநாளாக வழக்கப்பட்டிருக்கின்ற காச்மீர தேசத்தவர்தவிர மற்றெவரும் அவ்வாறு நெய்யத்திறமையுடையவர்களாகார்; ஆகையால் யந்திரங்கள் ஏற்பட்டாலும் காச்மீரத்துச்

சால்வை மிருதியாக விலைப்படுமேயன்றி மற்றவைகளுக்குக் கேள்வியிராதென்பீர்களோ, அப்படியில்லை; உயர்ந்தசால்வைகளில்லாவிட்டாலும் சாதாரணமான மட்டக்கம்பளிகள் நெய்து மிருந்த லாபமடையலாம். நாம் உஷ்ணதேசத்தில் வசிப்பவர்களானதுபற்றிக் கம்பளங்கள் நமக்கு அத்தனையாய் அவசியமில்லையாகையால், அதன் அருமை இப்படிப்பட்டதென்று அதிகமாய்த் தெரியவில்லை. வீட்டிற்குள் இருப்பவன் நிழலருமை அறியானல்லவா? சீததேசங்களில் வசிப்பவர்களுக்குத் தெரியும் கம்பளத்தினருமை. சீதகாலங்களில் வெளியே திரிகிற போலீஸ்சேவகர், படைச்சேவகர் முதலியவர்களுக்கு முரட்டுக்கம்பளம் மிகவும் அவசியமானது. அப்படியாயின், இப்போ பாஞ்சாலதேசத்தில் நெய்யப்படுகிற கம்பளங்களுக்கு ஏன் அத்தனையாய்க் கேள்விபிறக்கவில்லையென்பீர்களோ? சாக்கு விலைப்படுவதற்கு, அச்சரக்கு யாவர்க்கும் உபயோகமாயிருப்பது ஒன்றுமாத்திரமே போதாது; அதனோடு அதன் விலை நயமாயுமிருக்கவேண்டும். இப்பொழுது அவை அருமையாயும் விலையதிகமாயுமிருப்பதால அநேகர்க்கு அவற்றைக்கொள்ளச் சக்தியில்லாமலேயிருக்கிறது. அப்படியின்றி அவை யந்திரங்களின் மூலமாய் மிருதியாக நெய்யப்படுமாயின், அவற்றின்விலை மிகவும் ஸரஸமாகும்; நாலாபக்கத்திலுமுள்ள ஜனங்கள் நான் நான் என்று அவற்றைவாங்கிக்கொள்ள ஓடிவருவார்கள். பஞ்சாப்முதலான தேசங்களின் ஆட்டுரோமங்களைக்கொண்டு யந்திரங்களின்மூலமாய்க் கம்பளம் நெய்யப்புகுந்தால் அவற்றின்மேல் அநேகமாயிரம பேர் அபேக்ஷைகொள்வார்கள். ஒரு சமயத்தில் விலைக்குக் கேட்பவர்களுக்குச் சரியாய்ச் சாக்கு நெய்துகொடுப்பதுகூட அசாத்தியமாகும்படி அவ்வளவு அதிகமாய் அநேகர் வாங்கும்படியுமாகும். சாயம் ஏற்றிய நூல்களைக்கொண்டு நெய்து கம்பளமென்று மோசஞ்செய்யாமல் ஆட்டுரோமங்களைக்கொண்டே உண்மையாய் நெய்தால், இப்பொழுது நடந்துவருகிற இத்தன்மையான மோசங்களெல்லாம் எடுபட்டுப்போம்.

இத்தேசத்தில் யந்திரங்களின்மூலமாய்க் கம்பளம் நெய்யப்புகுந்தால், அதை வெளித்தேசத்தார் விலைக்குக் கேட்பதிருக்கட்டும்; இவ்விந்துதேசத்திலே பட்டாளங்களுக்கே அபரிமிதமாய்ச் செலவாகும். அவைகளுக்குவேண்டியது நெய்து கொடுப்பதே கஷ்டஸாத்தியமாகும். ஒருவருஷத்துக்கு முன்னே பாஞ்சாலதேசத்தில் கம்பளம் நெய்யும் யந்திரமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இனனும் அது வெளிகளில் பிரசித்தமாய்த் தெரியாதிருக்க, இப்போதே நல்ல சம்பாத்தியமுள்ளதாயிருக்கிறதென்றால், இனி எங்கும் பிரசித்தமானால் அப்போது கேட்பானேன. பாஞ்சாலதேசத்து ஆட்டுரோமம் கம்பளமாக நெய்யப்பட்டால் அது எப்படிப்பட்ட குளிரும் கிட்ட அண்டாதபடி காக்குமெனவும், இப்பொழுது சிமையில்

நெய்யப்படுகிற கம்பளத்தை மிகவும் விஞ்சியதாயிருக்குமெனவும் அநுபவத்தில் தேர்ந்தவர்கள் சொல்லுகின்றனர். ஆதலால் இத் தேசத்திலுள்ள சீமான்களும் பிரபுக்களும் மிக்கலாபம் விளைவிக்கத் தக்கவையும், அனைவர்க்கும் உபயோகமானவையுமான இவ்வகை வியாபாரங்களை மேற்கொண்டு இத்தேசத்தின் சீர்மை மேன்மேலும் விருத்தியாவதற்கு வேண்டியவழிகளைத் தேடக்கடவர்கள்.

உத்தமனான கணவன்.

கணவனும் மனைவியும் இணைபிரியாது ஒத்து வாழ்வதே இல் வாழ்க்கைக்கு அழகாம். பல்லோரறியப் பறைமுழங்க மாலையிட்ட மனையாளைத் தான் மணந்துகொண்டகாலத்தில் மண்ணும்விண்ணு மறிய அவளுக்குப் பலவாறாகச் செய்துகொடுத்த பிரமாணங்களுள் ஒன்றையேனுமறவாமல் கண்ணை இமைகாப்பதுபோல் காத்து அவள் விஷயத்தில் கறந்தபால்கறந்தபடி உள்ளன்புபாராட்டியிருந்து, பூமி ஒரு முழம் பூரித்து எல்லோரும் கண்டு நன்று நன்றெனக்கொண் டாடும்படி மனையாளுந்தானுமாய் ஊசியும் சரடும்போல ஒருவழிப் பட்டு வாழ்ந்திருத்தலே இல்வாழ்வான் பெற்றபேறாகும். "நான் கொண்ட மனையாளுக்குவேண்டிய ஆடையாபரணங்களை அளித் திருக்கிறேன்; அன்றியும், விடிந்தெழுந்தால் அறுசுவை உண்டி உண்கிறாள்; அவள் என்னை மணந்ததினால் எத்தனையோ ஏற்றம் பெற்றிருக்கிறாள்" என்று தற்புகழ்ச்சி செய்துகொள்பவனிலும் திரிக ரண சுத்தியாய்த் தன் மனைவியிடத்தில் அன்புபாராட்டி அவளைப் பாதுகாத்து வருபவனே சிறந்தவனாகும். தொட்டுத் தாலிகட்டிய மனையாளோடு பாலுந்தேனும்போலக் கலந்து ஒன்றுபட்டுக் காத லுற்று வாழ்ந்திருத்தல்தான் கிரகஸ்தனுக்குப் பெருமையாகும். தன மனைவியானவள ஏழைவீட்டிற்பிறந்து, தான் குபேரஸம்பத் துடையவனாயிருந்தாலும், தனக்குள்ள செல்வச்செருக்கால் அவளை அவமதிக்காமல், தன்னைப்போலவே தன்னுடைய சுகதுக்கங்களுக் கெல்லாம் அவளும் உடன்பட்டவள் என்று அவளை எப்போதும் ஆதரித்து வரவேண்டும்.

ஒருவனுக்கு உண்டிமுதலியனவற்றை அன்போடு அமர்ந் தளித்து, எப்பொழுதும் அவனுடைய க்ஷேமத்திலேயே நாட்ட முடையவளாயிருப்பதில் மனைவியின மிக்கவ ருண்டோ? தாய்க் குப்பின்தாா மென்பது பொய்யோ? வழிபாடுடையவளும், வாழ்க் கைத்துணையாயிருப்பவளும், பூமியைப்போலப பொறையுடையவ ளும், கணவன் எள்ளென்றால் எண்ணெயாக நிற்பவளும்,

கல்வி கேள்விகளால் நிறைந்த நல்ல குணவதியும், ரூபவதியும், பாக்கியவதியுமான நன்மனையாட்டி வாய்க்கவேண்டுமென்று எவர் தாம் ஆசைப்படார்? இவ்வாறே பெண்களும் தங்கள் குணத்திற்கேற்றபடி கணவன் வாய்க்கவேண்டுமென்று ஆசைப்படுவது இயல்பேயாம். ஆதலினால், கணவனும் மனைவியும் அந்நியோந்நியமாய் இருந்தால்மட்டுமே இல்வாழ்க்கை பயன்படும். இவ்வுண்மையறியாமல், சிறிதேனும் இரக்கமின்றி மனையாளை அடிமைபோலெண்ணிக் கொடுமையாய் நடத்த முயல்வது மானிடப்பிறப்பிற்கே உரியதன்று. மன்னுயிரையெல்லாம் தன்னுயிரைப்போலெண்ணி நடக்கின்ற மகான்கள், தம் மனைவியர்களைத் தம்மைப்போலவே நினைத்து, அவர்கள் மனம் நோவாது அன்பாய் நடத்தி வருகிறார்.

மனைவியினிடத்தில் புருஷர்களுக்கு அன்பாயிருக்கத்தெரியாமையினாலேயே குடும்பங்களில் கலகமுண்டாகி அல்லற்படும்படி நேரிடுகின்றது. ஒருவன் தன் மனைவியை எவ்வளவுக்கெவ்வளவு அன்பும் மரியாதையுமாய்க் கள்ளங்கபடமில்லாமல் ஆதரவாக நடத்திவருகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் மனையாளும் தனது காதற்கொழுநனே கதியென்று தேனும்பாலும்போல அவனோடு இன்புற்றுவாழ்ந்து, குடும்பரக்ஷணத்தைத் தானே நின்று நிர்வகிக்கத் தலைப்பட்டு, தன் காதலனுக்கு உற்றவாழ்க்கைத் துணையாகி நிற்பாள். ஸாதாரணமான ஸ்திரீகளே இப்படி அன்பு பாராட்டுகிறார்களென்றால், அதிர்ஷ்டவசத்தால் நற்குண நற்செய்கையுள்ள மனைவி ஒருவனுக்கு வாய்ப்பாளேயாயின், அவள் பெருங்குணத்துக்கேற்றவண்ணமாக அவனும் அவளை நடத்திவருவது திண்ணமாதலால், அக்குடும்பம் எல்லாச் சிறப்பும்பெற்றிருக்குமென்பதற்குச் சந்தேகமென்ன? இவ்வுலகில் குற்றமற்றவரில்லையாதலாலும், யார்க்கும் தங்குற்றந்தெரிவது அரிதாகையாலும், குற்றம்பார்க்கில் சுற்றம் இல்லை யாதலாலும், ஒருவர் பொறை இருவர்நட்பாதலாலும், பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வாராதலாலும்,

> "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
> தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
> எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருங்
> கண்ணிரண்டு மொன்றையே காண்"

என்றபடி கொழுநனும் மனைவியும் அணுவளவேனும் வேற்றுமைப்படாமல் ஒற்றுமையாயிருந்து, இல்லறநெறி சிறிதும் பிறழாது சர்க்கரைப்பந்தலில் தேன்மழை பொழிந்தாற்போல இன்புற்றிருந்து, கண்டவர் கேட்டவரெல்லாரும் கொண்டாடும் தகைமைபெற்றுப் பெருமையாய் வாழ்ந்திருத்தல் நன்றாகும். கணவன்மட்டும் நல்ல குணவானாயிருந்தால், அவன் மனைவி எப்படிப்பட்ட தீக்குணமுள்ளவளாயிருப்பினும், அவளைச் சீர்திருத்தி நல்லவளாக்கி

விடுதல் அரிதன்று. மனையாளானவள் கூற்றினுங் கொடியவளாயிருப்பினும், கணவன் எந்நேரமும அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு சீற்றஞ் சிறிதுமின்றி யாரிடத்திலும அன்பாயிருக்கப் பழகிவிட்டால், அவன் மனையாளும் இழிகுணமனைத்தும் நீங்கினவளாகி, தனது காதல்கொழுநன் விஷயத்தில் மனபூர்வமாய் நேசமுற்று, வீட்டுவேலைகளையெல்லாம் அடிமைபோல இரவுமபகலுமா யுழைத்துச் சீர்ப்படுத்தி இல்வாழ்க்கைக்கு உற்றதுணையாவாளென்பதிற் சந்தேகமில்லை. குணவதிகளான பெண்கள் தமது தேகசௌக்கியத்தைக் கொஞ்சமேனும பாராட்டாமல் "கொண்டானின் றுன்னிய கேளிர் பிறரில்லை" என்பதைத் திண்ணமாகக்கொண்டு தமது அருயிர்க்காதலர் விஷயத்தில் அன்புபாராட்டி, வீட்டுவேலைகளில் ஓடியுழன்று அடிமைகளைப்போல இரவும்பகலுமா யுழைக்கிறதைக் கண்டும், சிலர் கல்நெஞ்சுடையராய் அந்நற்குண நற்செய்கைகளை நினையாமல் அப்பேதைப் பெண்கள்விஷயத்தில ஏதோதானோவென்று உதாசீனராயிருப்பதினாலன்றோ அப்பெண்கள் மனங்கசந்து அவர்களுக்கு வீடு காடுபோலாகின்றது. குடும்பத்தை இன்பக்கடலாக்கி, இல்லாளுந் தானுமாய்த் தம் மக்களைப்போற்றிச் சிறப்புற்று வாழ்ந்திருப்பது கிரகஸ்தனைப் பொறுத்த கடனாயிருக்க, குணவதியான மனைவி வாய்த்தாளேயென்று தன்னுள்ளே ஆனந்தப்படாமல், அந்தக் கற்புடை மனையாளை மனநோவச் செய்கிறவன் பேதையில் பேதையேயாம். கற்புடைப்பெண்டிர் தமது காதற்கொழுநன் கண்டு உவக்கவேண்டுமென்ற முழுநோக்கத்தோடு அவனுக்கு உவப்பானதொன்றை இனிது முடிக்குமாறு இரவும் பகலுமாய் ஓடியுழன்று வருந்தியுழைக்குங்கால், அவன் அதைக் கண்டு களியாவிடினும் அவளைக் கடிந்துகொள்வானேயாயின், அவள் எவ்வாறு வெந்துயருற்றுச் சிந்தை சோரவேண்டாம்? கொண்டவன் சீறுமாறென்றிருந்தால் அப்பேதையென்னசெய்வாள்? மனைவியின் விருப்பத்தை அநுசரித்து ஒருவன் நடக்கப் புகுவானேயாயின், அவன் மனையாள காலகண்டியாயிருந்தாலும், ஒரு நொடிப்பொழுதில் அவளுடைய கல்லானமனங் கரைந்துருகித் தன் பர்த்தாவினிடத்தில தேவதாவிசுவாச முடையவளாகி விடுவாள். தன் மனையாள் அடங்காப்பிடாரியாய் இருந்தாலும், அந்த வெட்கக்கேட்டை வெளியேவிடாமலும், மனந்தளராமலும், எப்படிப்பட்ட அற்பகாரியங்களிலும் அவள் மனப்போக்கின்படியேபோக விட்டு நாளடைவிலே அவளைத் தன் குணத்தோடு பழகும்படி செய்துகொள்ளவேண்டியது கணவனைப் பொறுத்த கடனாம். "கொண்டோரெல்லாம பெண்டிருமல்லர்" என்பதைப் பொய்யாக்கி, தங்கள் மனைவிகள் எத்தனை குணக்கேடுள்ளவர்களாயிருந்தாலும் அவற்றையெல்லாம் ஒருவாறுமறந்து அவர்களைச் சீர்ப்படுத்தி ஆள்வதே ஆண்மக்களுக்கழகு. இவ்வுலகில் பெண்டுகளை

ல்லோரும் ஸாவித்திரியைப்போல உத்தமிகளாயிருந்துவிட்டால், இல்வாழ்பவர்களுக்கு என்னவருத்தமுண்டு? ஆகலின் மனைவி எவ்வளவு இழிகுணமுடையவளாயிருந்தாலும், அவளை இல்வாழ்க்கைக்கேற்ற வாழ்க்கைத்துணையாகச் செய்துகொள்ளுவதே கிரகஸ்தனுக்குப் பெருமையாம்.

தன் கை கண்ணைக் குத்தியதென்று அதனைக் களைபவர் இல்லாமையாலும், சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே யாதலாலும், மனைவியரிடத்துள்ள குற்றங்களைக்கண்டு திடனழிந்து ஏக்கங்கொள்ளாமலும், கோபாவேசங்கொண்டு குதித்துப் பொங்கியெழுந்து வன்சொற்கூறாமலும்,

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

எனக் கூறியிருப்பதால், நயவசனங்களால் எப்படியாவது அவர்களைக் குணப்படுத்துவதுதான் குடித்தனத்துக்கு அழகாகும். மனையாளுக்குக் கோபம்வந்தகாலத்தில் அவள் வாயில் அகப்பட்டுக்கொண்டு, ஆயுள்காலமெல்லாம் ஒருவர்க்கொருவர் விஷமாய்க் கசந்துபோம்படி, ஊர்சிரிக்கச் சண்டையிடாமல் சமயம்பார்த்து ஒதுங்கிவிடுவதே உத்தமமாகும். கணவனானவன் வெளியேயிருந்து வீட்டிற்கு வரும்போதே அகமலர்ச்சி முகமலர்ச்சிகொண்டிருந்தால், அவனது இல்லாள் அவனைக் கண்டு, தானும் அவ்வாறேயாகித் தன் மக்களோடும் கணவனோடும் கொண்டாடி மகிழ்ந்திருப்பாள். "என்காதற் கணவனார் சினமுகங்கொண்டதை நான் கண்டதேயில்லை; அவர் என்மீது கோபங்கொண்டதை நான் அறியேன்; அவரைவிட்டு இமைப்பொழுதேனும் பிரிந்திருக்க வல்லவளல்லேன்" என்று மனைவி உள்ளன்புபாராட்டிச் சொல்லும்படி நடப்பவனல்லவோ உத்தம புருஷனாவான்? அறியாமையினால் மனைவி கோபவேளையில் யாதேனும் பிதற்றக் கேட்பினும் அதைச் செவியிற் போட்டுக்கொள்ளாமல் விட்டுவிடுவதே நலம்.

கணவனுக்கும் மனைவிக்கும் யாதேனும் மனஸ்தாபத்தினால் ஒருவருக்கொருவர் வாக்குவாதமுண்டாகும்போலிருந்தால், உடனே இருவருள் ஒருவர் பொறுத்துக்கொள்ளவேண்டுமேயல்லாது, ஊருந்தெருவும் ஒன்றாய்ச் சிரிக்கும்படி குத்துப்பழி வெட்டுப்பழியாய்ச் சண்டையிடுகிறது கூடாது. கணவனுக்குக் கோபம் வந்தவிடத்து மனைவியும், மனைவிக்குக் கோபம் வந்தவிடத்துக் கணவனும் இப்படி இருவருள் ஒருவர் வாய்திறவாமல் ஒதுங்கிப் போய்விடுவதே நன்று; இவ்வாறு இருவருள் ஒருவர் நயந்து ஒதுங்கிப்போனால் வீட்டில் சண்டை மட்டுப்பட்டுச் சமாதானமுண்டாகத் தலைப்படும்; கணவன் மனைவி இருவர்க்கும் ஏககாலத்

தில் கோபம்வந்துவிட்டாலும் அவ்விருவருள் யாரேனுமொருவர் தணிந்துபோகவேண்டுவதுதான்.

> "... ... .பேதமிலா
> நம்பியரை நங்கையரும் நங்கையரை நம்பியரும்
> பம்பி யொன்றாய் வாழுமுறை பற்று."

என்றபடி கணவனும் மனைவியும் அந்நியோந்நியமாய் வாழ்ந்திருத்தல் வேண்டும். தம்பதிகள் அநுகூலர்களாய் இராதிருப்பார்களேயாயின், சாவுகாலமளவும் அவ்விருவரும் நீங்காத இடும்பையினால் வருந்தவேண்டுமாதலால், இது விஷயத்தில் நன்றாய் ஆராய்ந்து பார்த்து இருவரும் சமாதானமாய் ஒற்றுமை நயத்தால் இல்வாழ்க்கையில் அமர்ந்து நடப்பதே உசிதமாகும். வெகுகாலமாகச் சண்டையிட்டு ஒருவர்முகத்தை ஒருவர் பார்க்கப்பொறாமல பிரிந்து வெவ்வேறிடங்களில் வசிப்பவர்களும் இந்த ஒற்றுமை நயத்தின் பெருமையால் மீண்டும் ஒன்று சேர்ந்து எவ்வளவோ அன்புள்ளவர்களாகிவிடுவார்களென்றால், ஏதோ தெரியாமையினால் கோபங்கொண்டு, சிறிதுநேரம் பிரிந்திருப்பவர்கள் விஷயத்திற் கேட்பானேன்? சிலர் அணுவை மேருவாக்கி வீணே மனஸ்தாபப்படுவதுண்டு; குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொள்வதே பெரியோரது கொள்கையாதலாலும், நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்குமுண்டாதலாலும், கொழுநனும் மனைவியும் வேறுவேறு உருவமாய்த் தோற்றினும் வேதசாஸ்திரங்களில் சொல்லியபடி அவ்விருவரும் ஒன்றேயன்றி வேறல்லவாதலாலும், அவர்கள் சண்டையிட்டு வேறுபடுதல் தீதேயாம். கணவனும் மனைவியும் வளர்பிறையைப்போல நாளுக்குநாள் மேன்மேலும் அன்புடையவர்களாகி இருமனமும் ஒருமனப்படவேண்டும். ஸ்திரீ புருஷர்களுள், புருஷன் தனக்கு இஷ்டமானபடி வேண்டுமிடங்களுக்கெல்லாம் சென்று பொருள்தேடுவது அநாதிவழக்கம். ஸ்திரீகளுக்கு இப்படிச்செய்ய வாய்க்காமல் வீட்டிலேதானேயிருந்துகொண்டு நிர்ப்பந்தமாயிருக்கவேண்டியிருத்தலாலும், கல்விப்பயிற்சியால் சீர்திருத்தம்பெற்றுப் புருஷர்களைப்போலச் சில வேலைகளில் அமர்ந்துகொள்ளக்கூடுமென்றாலும், அவர்களைப்போல அத்தனை சுயேச்சையாய்ச்செய்யச் சரிப்படாமையாலும், புருஷர்கள் ஸ்திரீகளைத் தங்களாலியன்றமட்டும் அன்பாய் நடத்திவரவேண்டும். கணவன் தன் மனைவியினிடத்தில எத்தனைக்கெத்தனை அன்பும் ஆதரவுமாயிருக்கிறானோ, அத்தனைக்கத்தனை அவளும் அவன் விஷயத்தில் திரிகரணசுத்தியாய் நிர்த்தோஷமாயிருப்பாள். பெண்களுக்கு மனக்காவல் பெரிதோ, மனைக்காவல் பெரிதோ என்பதைப் புருஷர் நன்றாய் நிதானித்துப் பார்க்கவேண்டும்.

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை."

"உண்டியுட் காப்புண் டுறுபொருட்குக் காப்புண்டு
கண்டவிழுப்பொருட் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்பதிலதென்று வையத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந்தோரே!"

கொழுநன் எத்தனைதான் மிக்க பொருள் சம்பாதிப்பவனானாலும், வீட்டுக்கு வேண்டிய பண்டங்களை வாங்குவதுமுதலிய கிரக நிர்வாகவிஷயங்களில் இல்லாளின் கருத்திற்கிணங்கி நடத்தலே நன்றாகும். மனைவியானவள் வீட்டுக்கு என்னென்ன வேண்டுமென்று சொன்னாலும் புருஷன் தன்முகஞ் சுளியாது அவற்றை வாங்கிக்கொடுப்பதனால் குற்றமில்லை. மனைவி ஒருவேளை அவிவேகத்தால் பயன்படாத பண்டங்களை வாங்கச் சொல்லினும், அது சரியல்லவென்று தானே அறிந்துகொண்டபின் மீண்டும் அப்படி ஒருபொழுதும் செய்ய உடன்படாளன்றோ? எவ்விதத்திலும் வீட்டுக்கு அதிகாரியாகிய மனைவியே வேண்டுமென்று தன் குடும்பத்துப் பண்டங்களைப் பாழாக்குவாளேயாயின், அவளினுமிக்க குடிகேடி வேறுயார்? வேலியே பயிரை மேய்ந்தால் விளைவதெப்படி? விவேகிகளான பெண்டுகள் தங்களைக் கொண்ட கணவன்மார்களுக்கும், தாங்கள் அருந்தவமிருந்து பெற்றெடுத்த கண்ணான குழந்தைகளுக்குந் துரோகமாய்த் தங்கள் வீட்டுப் பண்டம்பாடிகளைக் கனவிலும் அழிக்க நினையார். ஸம்ஸாரமென்பது கடலாதலால், வீடென்றிருந்தால் அதற்கு எல்லாந்தான் வேண்டியிருக்கும். புருஷன் ஒவ்வொரு அற்பகாரியத்திலும் தலையிட்டு அடிக்கடி செலவு விவரங்கேட்பது அத்தனை சிறந்ததுமன்று. எப்பொழுதாவது வீட்டிலுள்ள பண்டங்கள் வீணே அழிக்கப்படுமாயின், அப்பொழுது கணவன் தன் மனைவியை ஆதரவோடு அழைத்துச் சொன்னால் அவள் ஆமென்று ஒப்புக்கொண்டு, செட்டுஞ் சீருமாய் இருப்பாளன்றோ? நன்மனையாட்டிகளால் குடும்பத்திற்கு உண்டாகும் பெருமையையெல்லாம் விரித்து உரைப்பின் பெருகும்.

"வழிபா டுடையனாய் வாழ்க்கை நடையாய
முனியாது சொல்லிய செய்தாங்கு—எதிருரையாது
ஏத்திப் பணியுமே லில்லாளை ஆண்மகன்
போற்றிப் புனையும் புரிந்து."

திருவள்ளுவநாயனார் தமது மனைவி இறந்தகாலத்தில்

"அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்க ணிரா."

என்று பாடினார். இவ்வுலகில் நன்மனையாட்டிகளை யிழந்து வெந்துயருற்றவர்கள் அனந்தங்கோடி. மனைவி எக்கேடுகெட்டாலென்னவென்று கருதித் தமது சவுக்கியத்திலேயே நாட்டமுள்ளவர்களாயிருப்பதைப்போல இழிவானது வேறொன்றுமில்லை. அத்தன்மை

யான புருஷர்களைப் பார்த்துப் பெண்டுகளும் அவ்வாறே நினைக்கத் தலைப்பட்டால் அவர்கள்மேல் குறைகூறுவது வழக்காமோ? விவேகிகளாயிருக்கிற ஸ்திரீபுருஷர்களிருவரும் ஏககாலத்திலும் ஒருவர்க்கொருவர் முகச்சாய்ப்பில்லாமல் ஒரு வழிப்பட்டுக் குடும்பத்தைத் தாங்கவேண்டும். ஆண்கோபம், பெண்கோபம் ஆகிய இவ்விரண்டு கோபமுந் தீதேயாம். எரிகிற கொள்ளியில் எந்தக்கொள்ளியானாலென்ன? கோவம் பாவமன்றோ? பெரும்பான்மையாய் இவ்வுலகத்தில் புருஷன் கெடுவதற்குப் பெண்ணும், பெண் கெடுவதற்குப் புருஷனுமே காரணமாம்.

"நல்லார்க ளெல்லாரு நல்லாரே தன்மையில்
வல்லாரால் கேடுபடா ராயின—நல்லறிவு
ஆண்மக்கள் பற்பலவே உண்டாகும் பெண்டிரும்
மாண்புக் கெடுக்கா விடின்."

குடும்பபாரத்தைக் கணவனும் மனைவியும் பேதமின்றி ஒற்றுமையாய் நிர்வகித்தாலன்றி அக்குடும்பம் செம்மையாயிராது தான். எந்தக்குடும்பத்தில் புருஷர்களால் பெண்டுகள் ஏற்றமாய் நன்கு மதித்து வரப்படுகிறார்களோ, அந்தக் குடும்பத்தில் எப்பொழுதும் எல்லாச் சிறப்பும் பொருந்தியிருக்கும். பகுத்தறிவில்லாத பக்ஷி மிருகங்களும் பழக்கப்படுகின்றனவென்றால், நம்மைப்போலவே பகுத்தறிவுள்ள பெண்டுகளும் நாமுஞ் சிறிதும் சீறுமாறென்றிராமல் தேனும் பாகும்போல ஒற்றுமையாய் வாழ்ந்திருப்பது ஆச்சரியமோ? கணவனே கதியென்றிருக்கின்ற கற்புடை மனையாள் விஷயத்தில் துரோகஞ்செய்பவனிலும் மிக்க பாவியில்லை. பெண்டுகள் தங்கள் ஆருயிர்க்கணவர் நிமித்தம் உயிரையும் விடத்துணிகிறார்களென்றால், அவர்கள் தங்கள் கணவரிடத்தில் பக்ஷமாயிருப்பார்களென்பதற்கு இதைவிட வேறென்ன நிதாசனம் வேண்டும்?

விடிந்தபின் போஜனஞ்செய்துவிட்டு, வேலைநிமித்தம் வெளியே போன கணவன் அந்திப்பொழுதாய் வீடுவந்து சேருவதற்குள்ளே, "கொழுநன் இல்லாவீடு என்னவீடு; எனது கணவனுக்கு ஊரெல்லாம் உற்ற தோழர்களாதலால் யாரோடு பேசிக்கொண்டிருக்கிறாரோ, எப்போ வருவாரோ அறியேனே; என் பிராணன் முழுதும் அவரிடத்தில் குடிகொண்டிருக்கின்றதே; அவருக்கும் என் விஷயத்தில் இப்படித்தானிருக்கும். பேதையேன் அவர் திருமுகத்தைக் காணாது வருந்துவதை அறிகிறவர் யார்? பொழுதோ படுகின்றது; அவர் இன்னும் வீட்டிற்கு வந்தபாடில்லையே; மழைமுகங் காணாத பயிர்போல எங்கள் குழந்தைகள் எனது பிராணநாதனைக் காணாமல் தவிக்கின்றனவே" என்று தன்னை அறியாது நெஞ்சங் கரைகின்ற கற்பின்மகளிரை யுடையவர்களெல்லாரும் அவர்கள் மீது பிராணபதமாயிருப்பார்களென்பதற்குச் சந்தேகமுண்டோ? "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்றபடி எல்லோரும்

தமது மனைவிமாரிடம் அன்பாயிருந்தால் எத்தனை அழகாயிருக்கும்? யார்க்கும் தங்கள் வீட்டிலிருப்பதுபோலச் சுகம் மற்றெங்குங் கிடைக்காது. பெரிதான ராஜ்யத்தை ஆளுவதிலுள்ள வருத்தம் ஒரு சிறு குடும்பத்தை நிர்வகிப்பதிலும் உண்டு. இல்வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களை ஆராய்ந்துபார்க்குங்கால், குடும்பரக்ஷணைத்திற்காகக் கொழுநன் வெளியேபோய்ப் பொருள்தேடி வருவதொன்றேயன்றி, இரவும்பகலும் இடைவிடாது ஓடியுழன்று அரும்பாடுபடுகின்றவள் மனைவியேயாம். அன்றியும் புருஷன் மக்கட்பேற்றை அடையவேண்டுமானால் பிரஸவவேதனை முதலிய பிராணாபத்துக்களெல்லாம் ஸ்திரீகளுக்கே யாதலாலும், அவர்கள் அநாதிகாலமாகப் புருஷர்களின் க்ஷேமத்திற்கென்றே பாடுபடுகின்றவர்களாதலாலும், அவர்களை அன்போடு ஆதரித்து வருதலானது புருஷர்களின் இன்றியமையாக் கடமையேயாம். மனைவி புத்திரவதியாய்விட்டால் கணவன் அவளிடத்தில் தேவதாவிசுவாஸமாயிருத்தல்வேண்டும்.

"படைப்பு பலபடைத்துப் பல்லாரோ டுண்ணும்
உடைப்பெரும் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகைநீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குடை மக்களை யில்லோர்
பயக்குற விலர்தாம் வாழுநாளே."

"கற்புடைத் தன்பு முடித்தானென் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு."

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

சிறுகுழந்தைகள் சொல்லும் இனியவார்த்தைகள்.

ஒருசமயத்தில் ஓர் ஞானாசிரியர் தம் சிஷர்களுக்கு என்னவோ உபதேசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அங்கிருந்த ஒரு சிறுவன், ஐயா! மறுபிறப்பு என்றீரே; அதென்னவென, அவ்வாசிரியர், குழந்தாய்! மறுபிறப்பு என்றால் மீண்டும் பிறத்தல் என்று பொருள்படும்; நீ மீண்டும் பிறக்க விரும்புகின்றாயோ என்றார். அதற்கு அச்சிறுவன், ஐயா! நான் இன்னொருதரம் பிறக்கையில் சோம்பேறியாய்ப் பிறந்தால் என்னசெய்கிறதென்ற பயம் பெரிதாயிருப்பதனால், எனக்கு மறுபிறப்பு வேண்டாமென்றான்.

ஒரு சிறுவன் தன் ஸகோதரன் ஸகோதரிகளை அழைத்துக்கொண்டு தன் பாட்டனாரின் புத்தகசாலையைக் கிட்டிச் செல்லும்போதெல்லாம், அவர் அவர்களை அதன்கிட்ட நெருங்கவொட்டாமல் கண்டித்துவந்தார். ஒருநாள் அவன் தாய் அவனை நோக்கி, மகனே! மோக்ஷம்பெற விரும்புகின்றாயோ வென, அவன், தாயே! எனது பாட்டனாரும் அங்கிருப்பாரோவென்றான். அவள், ஆம்; அவரும் அங்கே இருக்கும்படித்தான் இருக்குமெனக் கேட்டு அவன், அம்மா பாட்டனார் அங்கும் என்னைக்கண்டு அதட்டுவாராதலால் மோக்ஷம் எனக்கு வேண்டவே வேண்டாம் என்றான்.

ஒரு கிழவி சாககிடக்கையில் தன் தலைமாட்டில் உட்காந்திருந்த பேரப்பிள்ளையைப்பார்த்து, குழந்தாய்! நான் பிழையேனென்ன, அவன், பாட்டியாரே! இந்தத் தள்ளாதகிழத்தைக் கடவுள் கொண்டுபோவாரானால் அவருக்குத்தான் என்ன பயனென்றான்.

ஒரு சிறுவன் தன் பாட்டனாரின் நெற்றியில் மடிப்புவிழுந்திருப்பதைக் கண்டு, தாதா! இவ்வாறு உமது நெற்றியில் பள்ளமிட்டது யாரென, அவர், இது ஆண்டவன்செயலென, அவன் மீண்டும், ஐயா! ஏன் ஆண்டவன் உமது நெற்றியில் இவ்வாறு பள்ளந் தோண்டினாரென்று கேட்க, அவர், அப்பா! எனக்குத் தெரியாது; நீ என்னோடு வீண்வாதஞ்செய்யலாகாதென்றார். சிறுவன் சிறிதுநேரம் பொறுத்து, தாதா! அதுஸங்கதி இப்பொழுது எனக்கு நினைவிற்கு வந்தது; பசுக்களின் கொம்பில் விழுந்திருக்கும் மோதிரச்சுற்றுக்களால் அவற்றின வயதை அறிந்துகொள்ளக் கூடுமென என் தகப்பனார் சொல்லியிருக்கிறார், அதுபோலவே, உமது வயதை அறிவிப்பதற்காகக் கடவுள் உமது நெற்றியில் பள்ளம்வெட்டியிருக்கிறார் என்றான்.

சிறுவர்க்கான கதை.

கழுதையாகமாற்றும் ஒருவகைக்கீரை.

வெகுநாளைக்குமுன்னே வடதேசத்தில் வாலிபன் ஒருவனிருந்தான். அவனிடத்தில் பொய் புரளி யென்பவை ஒருபோதுமில்லை; எப்போதும சிரித்தமுகமும் சந்தோஷப் பேச்சுமாய்க் கண்டவர் மகிழும்படி வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் வில்வித்தையில் நன்றாய்ப் பழகியவன். அவன் ஒருகாலத்திலே வேட்டையாடிக்கொண்டு வெளியேபோகையில், வழியிலே ஒரு கிழவி அவனைக் கண்டு, பிள்ளாய், நீ மிகுந்த மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டுபோகிறாய்; நான் பசியால் வருந்தி எழுந்திருக்கச் சகதியில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறேன். ஏதாவது கொஞ்சம் காசுகொடுத்து இந்தவேளை நீ என்னைக் காப்பாற்றவேண்டும் என்று வருந்தி வேண்டிக்கொண்டாள். அதைக் கேட்டு அவன் அவ

ளிடத்தில் மிகவும் மனமிரங்கி ஐயோபாவமென்று, தன் கையில்
இருந்த ஏதோ கொஞ்சம்பொருளை அவளுக்குக் கொடுத்துவிட்டு
அப்புறம் போகப் புறப்பட்டான். அது கண்டு அந்தக் கிழவி
அவனைச் சற்றே நிறுத்தி, குழந்தாய், உன்னுடைய நல்ல குணத்
தைப்பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமுண்டாகிறது; என்னால்
செய்யக்கூடிய உதவி நானும் ஒன்று உனக்குச் செய்கிறேன்:
இதே வழியில் நேராகப்போ; சிறிது தூரத்துக்கு அப்பால் ஒரு
ஆலமரம் இருக்கின்றது; அம்மரத்தின்மேல் ஒன்பது பறவை
கள் ஒரு சிறிய வஸ்திரத்தை வைத்துக்கொண்டு, அதை யார் எடுத்
துக்கொள்ளுகிறதென்று அதற்காகச் சண்டை போட்டுக்கொண்
டிருக்கின்றன. அப்பறவைகளின்மேல் அம்புதொடுத்து அடிப்பா
யானால், அவைகள் வைத்திருக்கிற வஸ்திரம்மாத்திரமேயல்ல;
அந்தப் பறவைகளுள் ஒன்றுகூட அடிபட்டுக் கீழேவிழும். அவ
ற்றைப் பத்திரமாய் எடுத்துக்கொள். அவை அற்புதமான மகிமை
யுள்ளவை. நீ எவ்விடத்துக்குப் போக விரும்பினாலும், அந்த
வஸ்திரத்தை மேலே தரித்துக்கொண்டு அவ்விடத்தை மனத்தி
னால் நினைப்பாயானால் உடனே அவ்விடம்போய்ச் சேருவாய்.
அந்தப் பறவையின் பெருமையும் இதற்குக்குறைந்ததன்று; அதன்
உடலை நீ புசித்துவிடுவாயானால், தினந்தோறும் காலையில் நீ படுக்
கையைவிட்டு எழுந்திருக்கும்போது உன் தலைமாட்டண்டையில்
பொன் கட்டியொன்று விழுந்துகிடக்கும்; அவற்றைக்கொண்டு
நீ சுகமாக ஜீவிக்கலாம் போவென்றாள்.

அதுகேட்டு அந்த வில்லாளி, அவள் சொன்னபடியே நடக்
குமாயின் இது நமக்குப் பெரும் பாக்கியமேயென்று அகமகிழ்ந்து
அவளை வணங்கி விடைபெற்றுக்கொண்டு அப்புறம் சென்றான்.
அங்கிருந்து சிறுதுதூரம் போகையிலேயே வழியிலிருந்த ஒரு மரத்
தில் பல பறவைகள் கூடிச் சண்டைபோடுகிற கூச்சல்கேட்டது.
இதென்னவென்று அண்ணாந்துபார்த்தான்; அம்மரத்து நுனியில்
அநேகம் பறவைகள் ஒன்றாய்க்கூடி ஒரு வஸ்திரத்தை வைத்துக்
கொண்டு, ஒவ்வொன்றும் அது தனக்குத்தான் வேண்டும், தனக்
குத்தான் வேண்டுமென்று மூக்கால் இழுத்துக் கிழித்துக்கொண்
டிருந்தன. அது கண்டு அவன் அந்தக் கிழவி சொன்னது உண்
மைதானென்று தன் கையிலிருந்த வில்லில் நாணேற்றிட்டு அந்தப்பற
வைகளின்மேல் அம்பையெய்தான். அந்த அம்புபட்டு அவைக
ளுள் ஒரு பறவையும், அவை வைத்துக்கொண்டிருந்த வஸ்திரமும்
கீழே வீழ்ந்தன; மற்றப் பறவைகள் பறந்தோடிப்போயின. கீழே
வீழ்ந்த பறவையையும் வஸ்திரத்தையும் எடுத்து, கிழவி சொன்ன
விதமாகவே பறவையின் உடலைப் புசித்து வஸ்திரத்தை மேலே
தரித்துக்கொண்டு அவன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

மறுநாள் காலையில் எழுந்திருக்கும்போது காட்டிலே கிழவி சொன்னதை அவன் மறந்துபோகவில்லை; கண்ணை விழித்துக்கொண்டவுடனே தலையணையைத் தூக்கிப்பார்த்தான்; அதன்கீழ்ப் பெரிய பொன்கட்டியொன்று விழுந்து கிடந்தது. அன்றுமாத்திரமேயல்ல; அன்றுமுதல் ஒவ்வொருநாள் காலையிலும் ஒவ்வொரு பொன்கட்டி அகப்பட்டுக்கொண்டிருந்தது. சில நாளைக்குள் அளவற்ற பொன் சேர்ந்து அவன் மிகுந்த தனவானாகிவிட்டான். அப்படியிருக்க ஒருநாள் அவன், நாளுக்குநாள் மேலுமேலும் பொருள் குவித்துக்கொண்டு வீட்டிலேயே உட்கார்ந்திருப்பதில் என்ன பயன்; வெளியே போய்ப் பலதேசங்களையும் பார்த்துவரவேண்டுமென்று விருப்பங்கொண்டவனாகி, தாய்தகப்பன்மாரிடம் விடைபெற்றுத் தன் விசித்திரமான வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு தேசஸஞ்சாரம் புறப்பட்டான்.

சிலநாள் பிரயாணம் செய்கையில் நடுவழியிலே ஒரு பெருங்காட்டுக்கு அப்பால் அழகிய மாளிகையொன்று காணப்பட்டது. அம்மாளிகையில் தாயும் மகளுமாய் இரண்டு ஸ்திரீகள் வாஸம்செய்துகொண்டிருந்தார்கள். அம்மகள் மிக்க வடிவழகுள்ளவள்; தாயோ மிகுந்த மாயைகள் கற்றவள். வீட்டிலிருந்த அந்தக் கிழவி வெகுதூரத்திலேயே இவன் வருவதைப் பார்த்து இவனிடத்திலுள்ள சக்தி இப்படிப்பட்டதென்பதைத் தெரிந்துகொண்டு தன் மகளைப்பார்த்து, பெண்ணே, அதோ வருகிறானே; அவனிடத்தில் ஒரு அதிசயமிருக்கின்றது; நாம் அதை எப்படியாவது அபகரித்துக்கொள்ளவேண்டும் என்று, அதைப்பற்றிய செய்திகளையெல்லாம் விவரமாய் மகளுக்குத் தெரிவித்தாள். இந்த வில்லாளியும் தான் நெடுந்தூரம் நடந்து இளைப்படைந்திருந்ததனால் அன்றைப்பொழுதை அவ்விடத்திலேயே போக்கும்படி நிச்சயித்து அந்த மாளிகைக்கே போய்ச்சேர்ந்தான்.

அவன் அவ்வீட்டில் நுழைவதற்கு முன்னமே அவ்விடத்தில் அவனுக்கு வேண்டிய மரியாதைகள் நடந்தன. அவ்வீட்டுக்காரி எதிர்கொண்டுவந்து அவனை அழைத்துப்போய்ப் பலவிதமான உபசாரங்கள் செய்து இனிய உணவுகளும் அளித்தாள். அவன் அவ்வீட்டிலிருந்த மகளின் ரூபலாவணியங்களையும் நற்குணங்களையும் கண்டு தான் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்ற கருத்துடையவனாகி, அவ்வீட்டிலேயே சிலநாள் தங்கியிருக்கவேண்டுமென்று தீர்மானித்தான். இப்படி அவன் அம்மகளின்மேல் ஆசைகொண்டது அந்தக் கிழவிக்குச் சர்க்கரைப்பந்தலில் தேன்மழைபொழிந்ததுபோலாயிற்று. அந்தக் கிழவி நினைத்தபடி அவனை மோசஞ்செய்வது அச்சிறுமிக்குச் சிறிதும் சம்மதமில்லையானாலும், அவளுடைய நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் தானும்

அதற்கு உடன்பட்டவள்போலிருந்தாள். அவனுடைய குறிப்புகளைத் தெரிந்துகொண்டவுடனே கிழவி அவனுக்குப் பின்னும் அதிகமாய் உபசாரஞ்செய்பவளைப்போல நடித்து, ஒருநாள் அவன் வயிற்றிலுள்ள பறவை மாமிசம் வெளியே வந்துவிடும்படி வாந்தியாகத்தக்க மருந்தொன்றை ஏதோ ஒருவகையாய்க் கலந்து அவனுக்குக் கொடுத்துவிட்டாள். அதைக் குடித்த சிறிதுநேரத்துக்கெல்லாம் அவன் வயிற்றிலிருந்த பறவையின் உடல் வெளியே வந்துவிழுந்தது. தாய் அப்பறவை உடலைத் தான் எடுத்துப் புசித்துவிடப் போகிறாளேயென்ற நினைவினால் மகள் அதையே கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, கீழே விழுந்தவுடனே தான் எடுத்துப் புசித்துவிட்டாள். அதன் பிறகு அவனது தலையணையண்டை பொன்கட்டி விழவேயில்லை; அம்மகளின் தலையணையண்டையிலேயே விழத்தொடங்கியது. அப்பொன்களையெல்லாம் அந்தக் கிழவியே எடுத்துச் சேர்த்துக்கொண்டிருந்தாள். இப்படி அவர்கள் தன்னை மோசஞ்செய்த ஸங்கதி மறுநாள்காலையில் அவனுக்குத் தெரியவந்ததாயினும் அதைப்பற்றி அவன் அத்தனையாகக் கவலை கொள்ளவில்லை.

இந்தக் காரியம் முடிந்தபின்பு மாயக்கிழவி மறுபடி தன் மகளைப் பார்த்து, பெண்ணே, நான் நினைத்த காரியம் ஒன்று முடிந்தது, மற்றொன்றையும் முடிக்கும் உபாயத்தைச் சீக்கிரமே தேடவேண்டும்: இவனிடத்தில் விசித்திரமான வஸ்திரமொன்று இருக்கின்றது; அதை நாம் அவசியம் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்றாள். அவனை அதிகமாய் வருத்தப்படுத்த அம்மகளுக்குச் சிறிதும் சம்மதமில்லை; ஆயினும் மிகக் கொடியவளான தாயின் நிர்ப்பந்தம் பொறுக்கமாட்டாமல் அவள் அதற்கு உடன்பட்டாள். அதற்காக அம்மகள் செய்த உபாயமென்னவெனில், ஒருநாள் மிகவும் விசனமடைந்தவள்போல முகம்வாடித் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு வீட்டிலே ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அப்போது அவ்விடத்திற்கு வந்த வில்லாளி அவளைப் பார்த்து, பெண்மணியே, உன்னைப் பார்க்கும்போது மனதில் ஏதோ பெரிய விசாரங்கொண்டிருப்பவள்போலக் காண்கிறது. உனக்கென்ன விசாரம்; அதை எனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்று கேட்க, அவள், ஐயா, அதோ தெரிகிற பெரிய சலவைக்கல் மலைமேல் எனது செல்வமெல்லாம் புதையுண்டு கிடக்கின்றன; வச்சிரம் வைடூரியமுதலிய சிறந்த ரத்தினங்கள் மேன்மேலும் அவ்விடத்தில் விருத்தியாகின்றன. அவைகளை நான் எடுத்துக்கொண்டுவருகிற வழி தெரியவில்லை; பறவைகள்தவிர மற்றெவரும் அவ்விடம்போக வல்லவரன்றே. அதற்காகவே நான் மிக்க விசாரப்படுகிறேன் என்று சொன்னாள்.

அதுகேட்டு அவ்வில்லாளி, இதற்காகவா நீ இவ்வளவு விசாரப்படுகிறாய்? வேண்டாம்; நான் ஒரு நொடிப்பொழுதில் உன் மனோ

ரதத்தை நிறைவேற்றுகிறேன் என்று சொல்லி அவளைப் பக்கத்தில் வரச்செய்து தன் விசித்திரமான வஸ்திரத்தை இருவர்மேலும் படும்படி தரிததுக்கொண்டு அநத மலைமேலிருக்கவேண்டுமென்று நினைத்தான். மறுநிமிஷத்தில் இருவரும் அம்மலையின் மேற்புறம்போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடததிலே பலவிதமான ரததினங்கள் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவற்றுள் மிகச் சிறந்த ரததினஙகளையெல்லாம பொறுக்கி அவர்கள் குப்பலாய்ச் சேர்த்தாகள். சோத்தவுடனே அந்த மாயக்கிழவி தன் மாயையினால் அந்த வில்லாளிக்கு ஒருவகை மயக்கமுண்டாகும்படிசெய்ய, உடனே அவன் உடம்பு சோர்ந்தவனாகி, அசசிறுமகளின் மடிமேல் தலையை வைத்துக்கொண்டு படுத்துத் தூங்கிப்போனான். அத்தருணங் கண்டு அச்சிறுமகள் வில்லாளி வைத்திருந்த வஸ்திரததையெடுத்தத தன்மேல் அணிந்து, அவ்விடத்தில் சேர்த்துவைத்திருந்த ரத்தினங்களையெல்லாம வாரி மூட்டைகட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப் போகவேண்டுமென மனதில் நினைத்தாள்; மறு நிமிஷத்தில் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

இது நடந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் அங்கே படுத்துத்தூங்கின வில்லாளி விழித்துக்கொண்டு பார்த்தான், தன்னுடன் வந்த சிறுமி சமீபததில் இல்லாமல் தான்மாத்திரம் தனியே இருப்பது கண்டு திடுக்கிட்டு, ஆ! இதென்ன மோசம்! என்று சிந்தைகலங்கி இன்னது செய்கிறதென்று தோன்றாமல் தவித்துக்கொண்டிருந்தான்.

அம்மலை மிகக் கொடியவர்களான சில ராக்ஷதர்களுடையது. அவர்கள் அம்மலைமேலேயே வசிப்பவர்கள். இந்த வில்லாளி ஒன்றும் தோன்றாமல் தனியே தவித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மூன்று இராக்ஷதர்கள் இவனிருக்கும் இடத்தை நோக்கி ஓடிவந்தார்கள். வெகுதூரததிலேயே அவாகளைக் கண்டு வில்லாளி மிகப் பயந்து அபபடியே தரையில் படுதது மெய்ம்மறந்து தூங்குகிறவன்போலப் பாசாங்குசெய்யலானான். ராக்ஷதர்கள் அவ்விடம் வந்தவுடனே அவர்களுள் ஒருவன் இவனைக் கண்டு, இதென்ன இது,மனிதப்பூச்சிபோலக் காண்கிறது, என்று காலால் உதைத்துப் புரட்டித்தள்ளினான். அபபடியே நசுக்கிக் கொன்றுவிடு என்று மற்றொருவன் சொல்ல, மூன்றாவது ராக்ஷதன், ஐயோ! நம் பராக்கிரமத்தை இந்தப் பூச்சியினிடத்திலேதானா காட்டவேண்டும்; இது நமக்கு என்ன தீங்குசெய்யமாட்டும்! இவ்விடத்திற்கு மேல் இன்னும் சிறிதுதூரம் ஏறிவநதால் மேகங்கள்வந்து இவனை வாரிக்கொண்டு போய்விடுமே என்றான். ஆயினும், அவர்கள் விளையாட்டாய் அவனை இப்புறமும் அப்புறமும் காலால் புரட்டித்தள்ளிப் பின்பு தாம் போகவேண்டிய விடத்திற்குப் போய்விட்டார்கள்.

அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டுககொண்டிருந்த வில்லாளி அவர்கள் அபபுறமபோனவுடனே எழுந்து அமமலையின்

சிகரத்துக்கு ஏறிச் சென்றான். அவ்விடம்போய் உட்கார்ந்து அவன் இனி என்ன செய்யலாமென யோசித்துக்கொண்டேயிருக்கையில், அவ்வழியாகவந்த ஒரு மேகம் அவனை அவ்வண்ணமே தாககிக்கொண்டு வாயுமண்டலத்தில் பறந்தோடச்செய்தது. அப்படியே சிறிதுதூரம் போனபின்பு காற்றின் வேகம் கொஞ்சம் மெதுப்படவே, அவன் மேகமண்டலத்திலிருந்து கீழே பலவகைப் பூண்டுகளும் செடிகொடிகளும் அடர்ந்த ஒரு தோட்டததில் மெத்தைபோலிருந்த இலைகளின்மேல விழுந்தான். அப்போது அவன் பசியால் மிகவும் களைத்தவனாகி அத்தோட்டத்தில் நாற்புறமும் சுற்றிப்பார்த்தான்; கண்ணுககெட்டிய தூரம் தழைகளுடைய செடிகொடிகளுமேயொழியப் பழச்செடி யாதொன்றும் கண்ணுக்குப் புலபபடவில்லை. அதனால் அவன் வேறு விதியின்றி வாய்க்கு இனிப்பாயிராவிடினும் பசிபொறுக்கமாட்டாமல் அண்டையிலிருந்த ஒருவகைப் பூண்டைத் தின்ன ஆரம்பித்தான். அந்தப் பச்சிலை அவன் வயிற்றில் புகுந்தவுடனே அவன் வடிவம் விகாரமாக மாறிப்போயிற்று: அவனுடம்பில் நான்கு கால்களும், இரண்டு நீண்ட காதுகளும் ஒருதலையும தோன்றின. ஆயினும் அப்பொழுதும் அவன் பசி தணியவில்லை; இப்பொழுது கழுதையாக மாறியபின் அவன் வாய்க்கு அதிக இனிப்பாயிருந்தமையால் வெகு விருப்பத்துடன் அவைகளைப் புசிக்கத்தொடங்கினான். இவ்வாறு கழுதையாக மாறினானாயினும் அவனுக்கு முன் நினைவுமாத்திரம் கெட்டுப்போகவிலலை. அப்படியே அவன் மேய்ந்துகொண்டு போம்போது அங்கோரிடத்தில் மற்றொருவகையான பூண்டு இருந்தது. அதைத் தின்ற மறுநிமிஷத்தில திடீரென்று அக்கழுதை வடிவம் மாறித் திரும்பவும் மானிடவடிவம் உண்டாயிற்று.

இவ்வாறு நேர்ந்த பல வருத்தங்களால் அவன் மிகவும் இளைப்படைந்தவனாகி உடனே படுத்துத் தூங்கிப்போனான். காலையில் எழுந்தவுடனே, தன் வடிவத்தை மாற்றின பூண்டுகளின் பெருமையை ஆலோசித்து மிகவும் மகிழ்ச்சிகொண்டவனாகி, நல்லது, நமக்கு இவை மிகவும் உபயோகமாகுமென்று, அவ்விருவகைப்பூண்டிலும் சிறிதளவு எடுத்துப் பததிரமாய்க் கட்டிக்கொண்டு, தன்னை மோசஞ்செய்த கிழவி வசிக்குமிடததிற்குப் போகப் புறப்பட்டான். தெய்வாதீனமாய் அவன் இரண்டொரு தினங்கள் பிரயாணம்போவதற்குள்ளேயே அந்தக் கிழவியின் மாளிகை காணப்பட்டது. அது கண்டு அவன் வெகு சந்தோஷமடைநதவனாகித் தான் இன்னானென்று எவர்க்கும் தெரியாதிருககும்படி மாறுவேஷம் தரிததது அந்த மாளிகைபோய்ச் சேர்ந்து, அன்றிராத்திரி தனக்குத் தங்கியிருக்க இடம்கொடுக்கும்படி வேண்டினான்.

அவ்வீட்டுக்கிழவி இவனைப்பார்த்து, நீ யார், எங்கிருந்து வருகிறாய் என்று கேட்க, அவன், நான் அரசனுடைய தூதன்; நெடுந்

தூரத்துக்கப்பால் ஒரு காட்டிலே விளைகின்ற மிகவும் இனிப்பான கீரையொன்று தனக்குக் கொண்டுவரும்படி அவா என்னை அனுப்பினார். இதோ நான் அவற்றைச் சம்பாதித்துக்கொண்டுபோகிறேன். வெயில் அதிக உக்கிரமாயிருப்பதால் அரசன் வீடுபோய்ச் சேருவதற்குள்ளே கீரை எங்கே வாடிப்போகிறதோவென்று மிகவும் திகிலாயிருக்கின்றது என்றான். அதைக்கேட்டு அங்கிருந்த மாயக் கிழவி அந்தக் கீரையை உருசிபார்க்கவேண்டுமென்று மிக்க ஆவல் கொண்டவளாகி, அப்பா, குழந்தாய், அதில் எனக்குச் சிறிதளவு கீரை கொடுப்பாயா என்று கேட்க, அவன் அம்மா, தள்ளாத கிழவி நீ இத்தனை அபேக்ஷையாய்க் கேட்கும்போது உனக்கு இல்லையென்று சொல்வேனா? பின்னும் கொஞ்சம் அதிகமாகவே நான் பறித்துக்கொண்டு வந்திருக்கிறேன்; அதில் உனக்கும் சிறிது கொடுக்கிறேன் என்று சொல்லி, மூட்டையை அவிழ்த்துக் கெட்ட குணமுள்ள கீரையில் கொஞ்சமெடுத்து அவள் கையில் கொடுத்தான்.

அவன் கொடுத்தவுடனே அக்கிழவி அதில் யாதொரு சந்தேகமும் கொள்ளாமலே அதை உடனே சமைக்கும்படி தானே சமையலறைக்கு எடுத்துக்கொண்டு ஓடினாள். அதை எப்பொழுது தின்று அதன் உருசியை உணரப்போகிறோமென்ற அபேக்ஷையினால் அவள் நாவில் நீர் அதிகமாய் ஊறத் தலைப்பட்டது. அது சமையலாகுமளவுங்கூட அவளுக்குப் பொறுக்கவில்லை; ஆக்கப் பொறுத்தது ஆறப்பொறுக்கவில்லையென்றபடி அது சமைந்ததும் சமையாததுமாயிருக்கையிலேயே அதில் சிறிதளவு எடுத்து வாயில் போட்டுக்கொண்டு தின்றாள். தின்ற மறுநிமிஷத்தில் அவள் வடிவம்மாறிக் கழுதையாகிக் கொல்லைப்புறத்துக்கு ஓடிப்போனாள்.

உள்ளேபோன கிழவி சிறிதுநேரமளவும் வெளியேவராமற் போகவே, என்ன விசேஷமோ போய்ப் பார்த்து வருவோமென்று வேலைக்காரி எழுந்துபோனாள். உள்ளே எவருமில்லை, கீரை சமையல்செய்து சித்தமாக வைத்திருந்தது. அதைத் தின்னவேண்டுமென்ற ஆசை இவளுக்கும் இதிகமாயிருந்ததனால் அதில் சிறிதளவு எடுத்து இவளும் இவ்விடத்திலேயே தின்றாள். தின்றவுடனே அதன் மாயத்துக்கு உட்பட்டவளாகி உடனே கழுதையாக மாறி வேலைக்காரியும் வெளியே ஓடிப்போனாள்.

வெளிப்புறத்தில் உட்கார்ந்திருந்த மகள் சிறிதுநேரமளவும் பார்த்து, உள்ளேபோனவர்கள் ஏன் இன்னும் வரவில்லையென்று வில்லாளியைக் கேட்க, அவர்கள் அந்தக் கீரையைத்தின்று கழுதையாய்ப் போனார்கள் என்று அவன் தெரிந்துகொண்டு அதை அவளுக்குத் தெரிவிக்காமலே, என்னவோ நான்போய்ப்

பார்த்துவருகிறேனென்று உள்ளே சமையலிடத்திற்குப் போனான். அங்கே அவர்கள் தின்று மிகுந்தகீரை சிறிதளவு வைத்திருந்தது; அவ்விருவரும் கழுதையாகிக் கொல்லையில ஓடிக்கொண்டிருந்தார்கள். அது கண்டு அவன், ஆ! இப்பொழுதுதான் என் மனம் குளிர்ந்தது; உங்கள் மகளுக்கும் இந்தக்கோலம் காட்டுகிறேனென்று சொல்லி, மிகுந்த கீரையைக் கையில் எடுத்துக்கொண்டுபோய் மகள்கையில் கொடுத்து, அவர்கள பின்னேவருகிறார்கள்; உனக்கு நானே என் கையால் கொடுக்கவேண்டுமென்று இதை யெடுத்துக்கொண்டு வந்தேனென்று சொல்ல, அவள் வெகு சந்தோஷமாய் அதை வாங்கித் தின்றாள். தின்றவுடனே அவளும் மற்றவர்களைப்போலவே மானிடவடிவம் மாறிக் கழுதையாகிக் கொல்லைப்புறத்திற்கு ஓடினாள்.

பின்பு அவன் தான் இன்னானென்று அவர்கள் தெரிந்துகொள்ளும்படி தன் மாறுவேஷத்தைக் களைந்து தன் இயற்கையான வடிவத்தோடே அவர்கள் எதிரிலேபோய் நின்று, இப்பொழுது உங்களுடைய துரோக சிந்தைக்குத் தக்க தண்டனை உங்களுக்கு விதிக்கவேண்டுமென்று சொலலி, அம்மூன்று கழுதைகளையும் கயிற்றினால் பிடித்துக்கட்டிச் சமீபத்திலிருந்த ஒரு குடியானவன் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய், இக்கழுதைகள் ஒருவர்க்கும் அடங்காமலிருககின்றன; இவற்றை நீ உன இஷ்டப்படி ஏரில் கட்டி உழுது அடக்கவேண்டும்; பெரிய கழுதையை தினம் இரண்டு தரம் ஏரில்கட்டி உழுது அதறகு ஒருவேளை தீனிபோடவேண்டும்; சிறிய கழுதையை (வேலைக்காரியை) ஒரேதரம் ஏரில்கட்டி உழுது அதற்கு இரண்டுதரம் தீனிபோடவேண்டும்; மற்றொரு கழுதைக்கோ (அதுதான் மாயக்காரியின் மகள்) ஏரில் கட்டாமலே மூன்று வேளையும் தீனி மாத்திரம் போட்டுக்கொண்டு வரவேண்டும். இதற்காக உனக்கு என்னசெலவு பிடித்தாலும் நான் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னான். ராக்ஷஸக்கிழவியின் மகளாகிய சிறுமியை வருத்துவது அவனுக்குச் சற்றும் ஸம்மதமில்லை யாதலின் அவளை ஒன்றும் செய்யவேண்டாமெனத் திட்டஞ்செய்தான்.

பின்பு அவன் வீட்டுக்குத் திரும்பிவந்தான்; அங்கே ஒன்றுலொன்று குறைவின்றி எல்லாப்பொருள்களும் நிறைநதிருந்தன. அவ்விடத்தில் அவன் சுகமாயிருக்கையில் மூன்று நாளைக்குப்பின் குடியானவன் அவனிடததிற்குத் திரும்பிவந்து, ஐயா! நாளதோறும ஒரேதரம் உணவு அளிககும்படி சொன்ன பெரியகழுதை இறந்துபோயிற்று; மற்ற இரண்டும மூன்றுவேளை தீனி தின்றுகொண்டிருந்ததனால் இறக்கவில்லை; ஆனாலும் மிகவும் மெலிந்துபோயிருக்கின்றனவென்று சொன்னான். அதுகேட்டு அவன் அவற்றினிடத்தில் ஐயோ பாவமென்று இரக்கங்கொண்டு, அவற்றை

உடனே தன்னிடம் ஓட்டிக்கொண்டுவரும்படி திட்டஞ்செய்தான். அவை தன்னிடத்திற்கு வந்தவுடனே அவற்றிற்கு மற்றொரு வகையான இரையைக் கொடுத்துத் தின்னும்படிசெய்தான். அதைத் தின்ற சில நிமிஷத்துக்கெல்லாம் அவ்விரண்டும் பெண்களாகமாறிப் போயின. பெண்வடிவம் வந்தவுடனே ராக்ஷஸியின் மகள் வில்லாளியின் கால்களில் வீழ்ந்து, ஐயா, என்னை மன்னிக்கவேண்டும்; நான் செய்தகுற்றங்களெல்லாம் புத்திபூர்வமாய்ச் செய்தவைகளல்ல; அந்தக் கொடிய கிழவியின் தொந்தரை பொறுக்கமாட்டாமல் செய்தவைகள். ஆதலின் அடியாளிடத்தில் என்ன குற்றமிருந்தாலும் பொறுத்தருளவேண்டும்; தங்களுடைய வஸ்திரம் இதோ இருக்கின்றது; பறவையுடலோ என் வயிற்றிலிருக்கிறது; அதையும் தருகிறேன் என்று வேண்டிக்கொள்ள, அவன் அவளைச் சமாதானப்படுத்தி, அந்தப் பறவையின்உடல் உன் வயிற்றிலேயே இருக்கட்டுமென்றான். ஏனெனில் அவன் அவளைத் தனக்கு மனையாளாக்கிக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானித்தான். இதற்குப்பின்பு சீக்கிரமே அவன் தன் தாய்தந்தை முதலியவர்களை அழைப்பித்து, நல்ல சுப முகூர்த்தத்தில் அப்பெண்மணியை மணம்புரிந்துகொண்டு, ஒரு குறையுமில்லாமல் அவ்விடத்திலேயே சுகமாக வாழ்ந்திருந்தான்.

சமாசாரம்.

வடக்கே நடக்கும் போர்க்கலகம்—சில வருஷங்களுக்குமுன்னமே ருஷியர்கள் படையெடுத்துவருகிறார்களென்று பெருங்கூச்சலாயிருந்ததல்லவா? அப்போது உண்டாயிருந்த ஆப்கனிஸ்தானத்துச் சண்டை சமாதானமாக முடியவே, அதனோடு ருஷியர்களின் படையெடுப்பு மேலோங்காமல் அவ்வளவோடு அடங்கியிருந்தது. இப்போது ருஷியர்கள் மறுபடியும் இக்கீழ்நாடுகளின்மேல் படையெடுக்கத் துவக்கி மிகுந்தசைன்னியங்களோடு ருஷியாதேசத்தினின்றும் புறப்பட்டுக் காஸ்பியன் கடலைக் கடந்து ஆப்கனிஸ்தானம்வரையில் வந்திருக்கின்றார்கள். அவ்விடத்தில் மிகவும் உக்கிரமான யுத்தங்கள் நடக்குமெனத் தோன்றுகின்றது. நமது தேசத்தை ஆளும் அங்கிலேய துரைத்தனத்தாரும் இத்தேசத்து அரசாட்சிக்கு அபாயம் நேராதபடி அதற்கு வேண்டிய ஸனாஹங்களும் ஸேனாபலமும் செய்துவருகின்றனர்.

C. K. S. Press, Vepery, Madras. 1885.